# கலைக் கல்வி

நான்காம் வகுப்பு



Tele MANAS
National Tele Mental Health Programme
14416

# டெலி மானஸ் ஹெல்ப்லைன்

**டெலி-மானஸ் (டெலி மனநல உதவி மற்றும் மாநிலங்கள் முழுவதும் நெட்வொர்க்கிங்)**

**(14416 / 9800 - 89 - 14416)**

**தேசிய மனநலத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு நிதியுதவி அளிக்கும் திட்டமான டெலிமானஸ், மகாராஷ்ட்ரா மாநிலத்தில் அக்டோபர் 2022 முதல் செயல்படுத்தப்படுகிறது. டெலிமானஸ் திட்டத்தின் கீழ், 14416 என்ற ஹெல்ப்லைன் எண் மூலம் 24 X 7 இலவச ஒருங்கிணைந்த மற்றும் விரிவான மனநல சேவைகள் வழங்கப் படுகின்றன. இதில் பல்வேறு மனநலப்பிரச்சனைகளுக்கு நிபுணர்களால் சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியவை அடங்கும். டெலிமானஸ் ஹெல்ப்லைன் அழைத்த பிறகு நீங்கள் வழங்கும் தகவல்கள் முற்றிலும் ரகசியமாகவே இருக்கும். எனவே மாணவர்கள் தங்கள் பிரச்சனைகளை தொலைபேசியில் (அழைப்பதன் மூலம்) ஹெல்ப்லைன் எண்ணுக்கு தெரிவிக்கவும், தங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் கேட்கவும், தங்கள் பிரச்சனைகள் குறித்து உதவி பெறவும், மற்றவர்களை உதவிப்பெறச் சொல்லவும் தயங்க வேண்டாம்.**

# மனோதர்பன்

**வாரத்தின் அனைத்து நாட்களிலும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உளவியல் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குவதற்காக, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் மனோதர்பன் செல் மூலம் கல்வி அமைச்சகத்தால், மனோதர்பன் (8448440632) என்ற இலவச தொலைபேசி சேவை ஜூலை 2020 முதல் தொடங்கப் பட்டுள்ளது. தேவையான வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளைப் பெற மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த ஹெல்ப்லைனையும் அழைக்கலாம்.**

அரசாணை எண்: அப்யாஸ் - 2116/(ப்ர.க்ர.43/16) எஸ்டி - 4 நாள் 25.4.2016-ன் படி
அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் 01.06.2026 அன்றைய
கூட்டத்தில், இப்பாடநூல் 2026-27 ஆம் கல்வி ஆண்டு
முதல் பயன்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

# கலைக் கல்வி

## நான்காம் வகுப்பு



மகாரஷ்டிரா மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகம், புனே.

அருகில் உள்ள கட்டத்தில் இருக்கும் QR குறியீட்டை ஸ்மார்ட்போன் மூலம் ஸ்கேன் செய்வதன் மூலம், டிஜிட்டல் பாடநூல் மற்றும் பாடநூலில் உள்ள தலைப்புகள் சார்ந்த காட்சி, ஒலி மற்றும் காணொளி - கேட்பொலி வடிவத்திலான கற்றல்-கற்பித்தல் பொருட்களை நீங்கள் பெறலாம்.

**முதல் பதிப்பு: 2026**

© மகாராஷ்டிரா மாநில பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம் புனே-411004

இப்பாடநூலின் அனைத்து உரிமைகளும் மகாராஷ்டிர மாநில பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகத்திற்கு உட்பட்டவை. மகாராஷ்டிர மாநில பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழக இயக்குநரின் எழுத்துப்பூர்வ அனுமதி இன்றி, இப்பாடநூலின் எந்தவொரு பகுதியையும் மேற்கோள் காட்டவோ அல்லது பயன்படுத்தவோ கூடாது.


**'கலைக் கல்வி' பாடக் குழு**

திரு. சஷிகாந்த் தேஷ்முக், (தலைவர்)
திரு. சிவாஜி ஹாண்டே (உறுப்பினர்)
திரு. கோரக்ஷநாத் ஆபுஜ் (உறுப்பினர்)
திரு. ஸ்ரீகாந்த் டால்கர் (உறுப்பினர்)
திருமதி. பூனம் போபளே (உறுப்பினர்)
திருமதி. சாயா மால்வால் (உறுப்பினர்)
திருமதி. சினேகா காடே (உறுப்பினர்)
டாக்டர். சுமேதா தாக்கூர் (அழைப்பாளர்)
திரு. நந்தகிஷோர் நகர்கர் (அழைப்பாளர்)
திருமதி. முருகயா மோரே (அழைப்பாளர்)
திரு. அமோல் ஜாதவ் (அழைப்பாளர்)
திரு. நிதின் மகாமுனி (அழைப்பாளர்)
திருமதி. விருஷாலி லேலே (அழைப்பாளர்)
திருமதி. மிதாலி ஹர்குடே (அழைப்பாளர்)
திரு. ஓம்கார் வைராகர் (அழைப்பாளர்)
திரு. அமோல் போதே (அழைப்பாளர்)
திருமதி. ஜுய் தேஷிங்கர் (அழைப்பாளர்)
திருமதி. ரஷ்மி ஜோஷி (அழைப்பாளர்)
டாக்டர். கீதாஞ்சலி போருடே
(பாடத்திட்ட ஒருங்கிணைப்பாளர்)
டாக்டர். அஜய்குமார் லோல்கே
(உறுப்பினர் செயலர்)

**தர ஆய்வாளர்கள்**

டாக்டர். தயானந்த் கோட்கர்
(தர ஆய்வு)
அட்வகேட். சந்தேஷ் சாகரே
(சட்ட நிபுணர்)
பேராசிரியர். விலாஸ் பண்டித் (CWSN) நிபுணர்

**ஒருங்கிணைப்பாளர்**

**டாக்டர். அஜய்குமார் லோல்கே**
(சிறப்பு அதிகாரி - (C.B.)
I/C சிறப்பு அதிகாரி - கலைக் கல்வி,
பாடநூல் கழகம், புனே.)

**மொழிபெயர்ப்பு**

**திருமதி சித்ரா பாலசுப்ரமணியன்**

**ஆய்வு**

**திருமதி கீதா கிறிஸ்டோபர்**

**மொழிபெயர்ப்பு ஒருங்கிணைப்பு**

**முனைவர் துளசி பரத் பூஷன்**
சிறப்பு அதிகாரி தெலுகு (C.B.)
பாடநூல் தயாரிப்பு கழகம், புனே

**அட்டைப் பக்கம் மற்றும் உள் பக்க ஓவியங்கள்:**

திரு. லக்ஷ்மிகாந்த் காலே,
திருமதி. பிராஜக்தா கேரேகர்,
திரு. மனோகர் பாவிஸ்கர்,
திருமதி. பிராசி போதார்,
திரு. சோஹம் ஓதாரி,
திரு. ஆதித்யா பராட்கர்.

**எழுத்துக்கோர்ப்பு:** அச்சுப் பிரிவு,
பாடநூல் நிறுவனம், புனே.

**காகிதம்:** 70 ஜி.எஸ்.எம். க்ரீம்வோவ்

**அச்சுக்கட்டளை:** N/PB/2026-27/அளவு-50000

**அச்சுப்பொறியாளர்:** எம்/எஸ் குவாலிட்டி பிரிண்டர்ஸ், நாசிக்

**தயாரிப்பு**

**திருமதி. மிதாலி ஷித்தப்**
(I/C, முதன்மை தயாரிப்பு அதிகாரி)

**திரு. சந்தீப் ஆஜ்காவ்கர்**
(தயாரிப்பு அதிகாரி)

**வெளியீட்டாளர்**

**திரு. ஹேமந்த் பாபர்**
(I/C, கட்டுப்பாட்டாளர்,
பாடநூல் தயாரிப்பு நிறுவனம்,
பிரபாதேவி, மும்பை - 25)

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

**இந்திய மக்களாகிய நாம்,** இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச் சமுதாயமும் சமயச் சார்பின்மையும் மக்களாட்சி முறையும்** அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும் சமுதாய, பொருளியல், அரசியல் **நீதி,** எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு, சமய நம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை,** சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை** ஆகியவற்றை எய்திடச் செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும் தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும் **உடன்பிறப்புரிமையினை** வளர்க்கவும் உள்ளார்ந்த உறுதியுடையராய்,

**நம்முடைய அரசமைப்புப் பேரவையில்,** 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால் இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

பகுதி 4A

# குடிமகனின் அடிப்படைக் கடமைகள்

பிரிவு **51A**

**அடிப்படைக் கடமைகள் - ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உரிய கடமைகள் பின்வருமாறு-**

a) அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிந்து அதன் நோக்கங்களையும், ஸ்தாபனங்களையும் மதிப்பதுடன் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்து நடத்தல்;

b) நமது சுதந்திரப் போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உன்னதமான நோக்கங்களைப் பேணிக்காத்து பின்பற்றி நடத்தல்;

c) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்தல்;

d) நாட்டைக் காப்பதுடன், தேவையானபோது நாட்டு நலப்பணிகளையும் செய்தல்;

e) சமய, மொழி, வட்டார, பிரிவினை வேறுபாடுகளை எல்லாம் கடந்து இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதர உணர்வையும் நல்லிணக்கத்தையும் வளர்த்தல்; பெண்களின் கண்ணியத்தைக் குறைக்கின்ற செயல்களை விட்டொழித்தல்;

f) பல்வேறு கூறுகளுடைய நமது பண்பாட்டின் வளமான பாரம்பரியத்தை மதித்துப் போற்றிக் காத்தல்;

g) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலை மேம்படுத்திப் பாதுகாத்தல், உயிரினங்களிடையே பரிவுடன் இருத்தல்;

h) அறிவியல் மனப்பாங்கு, மனிதாபிமானம், ஆராய்ச்சி உணர்வு, சீர்திருத்த மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தல்;

i) பொதுச் சொத்தைப் பாதுகாத்தல்; வன்முறையை விட்டொழித்தல்;

j) தொடர்ச்சியாக நம் நாடு தன்னுடைய முயற்சியில் பல முன்னேற்றங்களைக் காணவும் சாதனைகளைப் படைக்கவும் தனிமனித மற்றும் கூட்டு முயற்சிகள் அனைத்திலும் திறமையை வளர்க்கப் பாடுபடுதல்;

k) 6 முதல் 14 - வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை பெற்றோர்களும், காப்பாளர்களும் வழங்கவேண்டும்.

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன்.

இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

# முகவுரை

அன்பான குழந்தைகளே,

உங்களை நான்காம் வகுப்பிற்கு அன்போடு வரவேற்கிறோம். இந்த நான்காம் வகுப்பு கலைக் கல்வி பாடப்புத்தகத்தை உங்கள் கைகளில் ஒப்படைப்பதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

உங்கள் கைகளில் இருக்கும் இந்த கலைக் கல்வி பாடநூல், நீங்கள் கலையைக் கற்றுக் கொள்ளும் போது மகிழ்ச்சியைத் தருவதோடு, உங்கள் கற்பனைத் திறனுக்கு வலிமை சேர்க்கும். படம் வரைதல், வண்ணம் தீட்டுதல், பாட்டுப் பாடுதல், நடிப்பு செய்தல், நடனம் ஆடுதல் அல்லது பல்வேறு அசைவுகளின் மூலம் உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல் என இவை அனைத்தும் சேர்ந்ததே கலை ஆகும். கலை, நமது எண்ணங்களையும் உணர்வுகளையும் அழகான முறையில் வெளிப்படுத்த உதவுகிறது.

இந்தப் பாடநூலில் காட்சிப் படிமக் கலை, அரங்கம், இசை, நடனம் மற்றும் அசைவுகள் ஆகிய நான்கு கலை வடிவங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. காட்சிப் படிமக் கலையில் நீங்கள் வரைபடம், நினைவூட்டும் வரைபடம், பொருள் வரைபடம், வடிவமைப்பு, சிற்பக்கலை, எழுத்து வடிவமைப்பு மற்றும் கலைச் கலாச்சாரம் போன்றவற்றை கற்பீர்கள். அரங்கக் கலையில் நடிப்பின் அனுபவத்தைப் பெறுவீர்கள், இசையில் பாடுதல் மற்றும் வாசிப்பதைக் கற்பீர்கள், அதேபோல் நடனம் மற்றும் அசைவுகள் மூலம் உடலின் லயத்தையும் தாளத்தையும் அனுபவிப்பீர்கள்.

இந்தப் பாடநூலில் உள்ள செயல்பாடுகள் நீங்களாகவே சிந்திப்பதற்கும், கற்பனை செய்வதற்கும் மற்றும் புதிய விஷயங்களை உருவாக்குவதற்கும் உங்களுக்கு உதவும். சில செயல்பாடுகளை நீங்கள் தனியாகச் செய்வீர்கள், சில செயல்பாடுகளை நண்பர்களுடன் குழுவாகச் செய்வீர்கள். இதனால் கற்றல் மேலும் சுவாரசியமாகவும் மகிழ்ச்சியாகவும் மாறும்.

இந்தப் பாடநூலில் படம் வரையும் போதும், கலைப் படைப்புகளை உருவாக்கும் போதும் பல்வேறு பொருட்கள், கருவிகள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. முடிந்தவரை சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களைப் பயன்படுத்த முயற்சி செய்யுங்கள். நம்மைச் சுற்றியுள்ள பகுதியில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு எப்படி அழகான கலைப் படைப்புகளை உருவாக்க முடியும் என்பதை நீங்கள் அனுபவப்பூர்வமாக உணர்வீர்கள்.

உங்கள் பகுதியில் உள்ள உள்ளூர் கலைகள், கலைஞர்கள் மற்றும் கலாச்சார மரபுகளை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக சில செயல்பாடுகளும் களப்பயணங்களும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் உங்கள் பகுதியில் உள்ள அழகான கலைச் செல்வங்களை நீங்கள் மிக அருகில் இருந்து பார்க்க முடியும்.

ஒவ்வொரு மாணவரும் தனித்துவமானவர்கள் மற்றும் ஒவ்வொருவரிடமும் ஏதேனும் ஒரு சிறப்புப் பண்பு இருக்கும். எனவே, இந்தப் பாடநூலில் உள்ள செயல்பாடுகளைச் செய்யும்போது உங்கள் கற்பனைகளைத் தாராளமாக வெளிப்படுத்துங்கள். தவறு நடந்துவிடுமோ என்ற பயம் வேண்டாம். தொடர்ந்து முயற்சி செய்து கொண்டே இருங்கள் மற்றும் கலையைக் கற்றுக்கொள்வதில் மகிழ்ச்சி அடையுங்கள்.

இந்தப் பாடநூல் உங்களுக்குள் இருக்கும் கலைஞனை விழித்தெழச் செய்யும் என்றும், உங்களது கற்றல் பயணத்தை மேலும் அழகாக்கும் என்றும் நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

வாருங்கள், மகிழ்ச்சியோடு கலையைக் கற்போம் மற்றும் நம் கற்பனைகளுக்கு வண்ணம் தீட்டுவோம்.


**(அனுராதா ஓக்)**
இயக்குநர்
மகாராஷ்டிர மாநில
பாடநூலாக்கம் மற்றும்
கலைத்திட்ட ஆய்வுக்கழகம் புனே. 4


புனே.
**தேதி:** 19 ஏப்ரல் 2026
**இந்திய சூரிய ஆண்டு: வைஷாக்** 2, 1948
**அக்ஷ்யத்ருதியை**

# ஆசிரியர்களுக்காக

நான்காம் வகுப்பு மாணவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட இந்தக் கலைக்கல்வி பாடநூலை உங்கள் கைகளில் ஒப்படைப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். புதிய தேசியக் கல்விக்கொள்கை, 2020-ன் வழிகாட்டுதல்களின்படி, கலைக்கல்வி என்பது மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. மாணவர்களின் படைப்பாற்றலுக்கு இடமளிப்பது, கற்பனைத் திறனை வளர்ப்பது, சுய வெளிப்பாட்டிற்கு ஊக்கமளிப்பது மற்றும் கற்கும் செயல்முறையை மகிழ்ச்சிகரமானதாக மாற்றுவது ஆகியவை இந்தக் கலைக்கல்விப் பாடத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தப் பாடநூலில் காட்சிக்கலை, நாடகக்கலை , இசைக்கலை , நடன கலை மற்றும் அசைவுகள் ஆகிய நான்கு கலை வடிவங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கலை வடிவத்திலும் மாணவர்கள் உற்று நோக்கவும், வெளிப்படுத்தவும், புதியவற்றை உருவாக்கவும் மற்றும் தங்கள் சொந்தக் கற்பனைகளை வெளிப்படுத்தவும் வாய்ப்புகள் கிடைக்கும்.

செயல்பாடுகள், குழு வேலைகள், விவாதங்கள் மற்றும் பாத்திரமேற்று நடித்தல் போன்ற கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி கற்றல் அனுபவங்களை வழங்க வேண்டும். ஒவ்வொரு செயல்பாடும் மகிழ்ச்சியான கற்றல் செயல்முறையாக இருக்க வேண்டும். காட்சிப் படிமக் கலை, அரங்கம், இசை, நடனம் மற்றும் அசைவுகள் மூலம் மாணவர்கள் தங்கள் எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் கற்பனைகளை எளிதாக வெளிப்படுத்த முடியும்.

இந்தப் பாடநூலில் நான்கு பிரிவுகள் காட்சிக் கலை, நாடகம், இசை, நடனம் மற்றும் அசைவுகள் பிரிக்கப்பட்டிருந்தாலும், உங்கள் வருடாந்திரத் திட்டத்தில் இந்த நான்கு பிரிவுகளுக்கும் சமமான முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இதன் மூலம் மாணவர்கள் ஆண்டு முழுவதும் நான்கு கலை வடிவங்களையும் அனுபவித்து அறிந்துகொள்ள முடியும்.

இந்தப் பாடநூலில் உள்ள செயல்பாடுகளை வடிவமைக்கும் போது, அனைத்து வகையான மாணவர்களின் உள்ளடக்கிய வளர்ச்சியும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாணவரும் தங்களின் திறமைக்கேற்ப இதில் பங்கேற்கவும், அவர்களின் கலைத் திறமைகளுக்கு ஊக்கம் கிடைக்கவும் ஆசிரியர்கள் கவனத்துடனும் உணர்வுப்பூர்வமாகவும் செயல்பட வேண்டும்.

**ஆசிரியர்களுக்கான குறிப்புகள்:**

**காட்சிக்கலை:**

- பல்வேறு வகையான கோடுகள் மற்றும் வடிவங்களை வரைந்து பழகுவதன் மூலம், அழகான கையெழுத்தை உருவாக்குவதற்கான பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.
- இயற்கை கூறுகள் மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பொருட்கள் ஆகியவற்றிற்கு இடையே உள்ள வேறுபாட்டை விளக்கி, அதற்கான உதாரணங்களைக் கூற வேண்டும்.
- நினைவூட்டும் வரைபடம் வரைவதற்கான படிகளை விளக்கிச் சொல்ல வேண்டும். ஆனால், படம் வரையும்போது மற்றவர்களின் படங்களைப் பார்த்து நகலெடுக்கக் கூடாது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். மேலும், குறிப்பிட்ட நிகழ்வுகளை விவரித்து நினைவூட்டும் வரைபடங்களை வரைய ஊக்குவிக்க வேண்டும்.
- நினைவூட்டும் வரைபடம் மற்றும் கற்பனைப் படங்களின் மாதிரிகளைக் காட்டி, இரண்டிற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை விளக்க வேண்டும். மாணவர்களின் கற்பனைத் திறனை வளர்க்கும் வகையில் கதைகள்/நிகழ்வுகளைக் கூறி சூழலை உருவாக்க வேண்டும்.
- பல்வேறு வகையான சித்திரங்கள், நிழற்படங்கள், சிற்பங்களின் மாதிரிகளைச் சேகரித்து, அவற்றைச் கல்விப் பொருட்களாகப் பயன்படுத்த வேண்டும்.
- அனைத்து மாணவர்களும் காட்சிக் கலையில் ஆர்வத்துடன் படம் வரைவார்கள் என்று சொல்ல முடியாது, எனவே அவர்களிடம் ஆர்வத்தை உருவாக்குவதற்குத் தூண்டுகோலாக இருக்கும் கற்றல் அனுபவங்களைச் செயல்முறைகள் மூலம் வழங்குவது அவசியமாகும். ஏதேனும் ஒரு மாணவர் புதிதாக எதையாவது வரைய முயற்சித்தால், அவரை ஊக்குவித்து சரியான வழிகாட்டுதலை வழங்க வேண்டும்.
- உள்ளூர் கலை வடிவங்கள் மற்றும் கலைஞர்களை அறிமுகப்படுத்த வேண்டும். முடிந்தால், உள்ளூர் கலைஞர்களின் பணிமனைக்குக் களப்பயணம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

**நாடகம் :**

- வகுப்பறையில் மகிழ்ச்சியான சூழலை உருவாக்கி, இயல்பான மற்றும் இயற்கையான செயல்பாடுகள், அசைவுகள் மற்றும் மௌன நடிப்பு ஆகியவற்றைப் பழகச் செய்ய வேண்டும். சிறிய சிறிய குழுக்களை உருவாக்கி சூழ்நிலைகளை நடித்துக் காட்டச் சொல்ல வேண்டும்.
- விலங்குகள், பறவைகள் மற்றும் இயற்கையின் பல்வேறு கூறுகள் போல பாத்திரமேற்று நடிக்கச் செய்ய வேண்டும்.
- சுயமாக உரையாடல்கள் மற்றும் அசைவுகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும். படங்களைக் காட்டி, ''இந்தப் படத்தில் உங்களுக்கு என்ன தோன்றுகிறது ?'' என்பது போன்ற கேள்விகளைக் கேட்க வேண்டும்.
- ஒவ்வொருவரையும் பாத்திரமேற்று நடிப்பதிலும், வழங்குவதிலும் பங்கேற்கச் செய்ய வேண்டும். அன்றாட வாழ்க்கைக்குப் பொருத்தமான சூழல்களை வழங்க வேண்டும்.

- வழங்கும்போது அல்லது அசைவுகளைச் செய்யும்போது பாதுகாப்பைக் கவனத்தில் கொள்ள வேண்டும். கிடைக்கக்கூடிய பொருட்களைப் பல்வேறு வழிகளில் பயன்படுத்துவதைப் பழக்கப்படுத்த வேண்டும்.
- ஒரு குழுவினர் வழங்கும்போது, மற்ற குழுக்களில் உள்ள மாணவர்களுக்கு அதைக் கவனிப்பதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும். கவனித்துத் தங்களின் கருத்துக்களைக் கூற ஊக்குவிக்க வேண்டும். வகுப்பறையில் பாராட்டும் பண்பை வளர்க்க வேண்டும்.

**இசை :**

- வகுப்பறையில் மகிழ்ச்சியான மற்றும் உற்சாகமான சூழலை உருவாக்கி, மாணவர்களின் செயலில் பங்கேற்பை உறுதி செய்ய வேண்டும்.
- பாடல்களைக் கற்றுக் கொடுக்கும்போது, ஆசிரியரே பாடி அதைக் காட்ட வேண்டும். பாடல்களைக் கற்றுக் கொடுக்கும்போது, அவற்றின் சிறிய சிறிய பகுதிகளைப் பிரித்துக் கற்றுக் கொடுக்க வேண்டும்.
- தாளம், லயம் மற்றும் சுருதி ஆகியவற்றை எளிய உதாரணங்கள் மூலம் அறிமுகப்படுத்த வேண்டும். தாளத்திற்காகக் கைகளைத் தட்டுவதைப் பயன்படுத்திப் பாடல்களை மேலும் சுவாரசியமாக்க வேண்டும். தனிநபர் மற்றும் ஜோடிப் பாடல்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்.
- நாடோடிப் பாடல்களான வாசுதேவ் கீத், போவாடா, பாரூத், பஜன், ஜாத்யா வர்சி கானி (அரைக்கும் கல் பாடல்கள்) போன்றவற்றை அறிமுகப்படுத்தி, செயல்முறைப் பயிற்சிகள் மூலம் பழகச் செய்ய வேண்டும்.
- நம்மிடம் உள்ள வாத்தியங்களான (டோல், மேளம், கஞ்சிரா, ஹார்மோனியம், தபலா போன்றவை) ஆகியவற்றைப் பயன்படுத்தித் தாளத்தைப் புரிய வைக்க வேண்டும். சிறிய சிறிய குழுக்களாகப் பிரித்துப் பாடல்களைப் பாடப் பயிற்சி அளிக்க வேண்டும்.
- ஒவ்வொரு மாணவருக்கும் பாடுவதிலோ அல்லது வாசிப்பதிலோ பங்கேற்க வாய்ப்பளித்து அவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும்.
- கிடைக்கக்கூடிய பாடல்கள் அல்லது வீடியோக்கள் மூலம் சுரங்கள் மற்றும் அலங்காரங்களை தாளத்துடன் சேர்ந்து பயிற்சி செய்ய வைக்க வேண்டும்.
- க்யூ.ஆர். கோடைப் பயன்படுத்திப் பாடல்களைக் கேட்கவும், கற்றுக்கொடுக்கவும் வேண்டும். குழு மற்றும் தனிநபர் செயல்முறைகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டும்.

**நடனம் மற்றும் அசைவுகள்:**

- வகுப்பில் மகிழ்ச்சியான மற்றும் உற்சாகமான சூழலை உருவாக்கி, ஒவ்வொரு மாணவரையும் நடனத்தில் பங்கேற்க ஊக்குவிக்க வேண்டும்.
- எளிதான, இயற்கையான அசைவுகள் மூலம் நடனத்தை அறிமுகப்படுத்த வேண்டும்.
- அன்றாட அசைவுகளை (உதாரணமாக: நடப்பது, குதிப்பது, சுழல்வது) நடனமாக மாற்றச் சொல்ல வேண்டும்.
- தாளம், லயம் மற்றும் வேகம் ஆகியவற்றின் புரிதலை விளையாட்டு முறையில் கற்பிக்க வேண்டும்.
- முகத்தில் பல்வேறு உணர்ச்சிகளை (மகிழ்ச்சி, சோகம், ஆச்சரியம்) வெளிப்படுத்துவதற்கான வழிகாட்டுதலை வழங்க வேண்டும்.
- சிறிய சிறிய குழுக்களாகப் பிரித்து எளிய நடனங்களை வழங்க ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொரு மாணவருக்கும் நடனத்தில் பங்கேற்க வாய்ப்பளிக்க வேண்டும்.
- நடனம் ஆடும்போது உடலின் பாதுகாப்பு, சரியான உடல்வாகு மற்றும் பொருத்தமான ஆடைகளை அணிவது குறித்த அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.
- கிடைக்கக்கூடிய வளங்களை (இசை, இடம்) சரியாகப் பயன்படுத்திப் பல்வேறு வகையான நடன அனுபவங்களை வழங்க முயற்சிக்க வேண்டும்.
- நடனத்தின் முடிவில், அவர்கள் என்ன உணர்ந்தார்கள்/கற்றுக் கொண்டார்கள் என்பதைப் பற்றிச் சுருக்கமாகக் கலந்துரையாட வேண்டும். மாணவர்களின் படைப்பாற்றல் மற்றும் தன்னம்பிக்கையை ஊக்குவிக்கும் நேர்மறையான கருத்துக்களை வழங்க வேண்டும்.

அனைத்து வகையான மாணவர்களின் உள்ளடக்கிய வளர்ச்சியை மனதில் வைத்தே இந்தப் பாடநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாணவரும் தங்களின் திறமைக்கேற்ப இதில் பங்கேற்கவும், அவர்களின் கலைத் திறமைகளுக்கு ஊக்கம் கிடைக்கவும் இப்பாடநூலில் உள்ள செயல்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. சிறப்புக் தேவையுடைய மாணவர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களிடம் உணர்வுப்பூர்வமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஒவ்வொரு கலை வடிவத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ள பாடத்திட்டம், குறிக்கோள்கள் மற்றும் கற்றல் விளைவுகளின் அடிப்படையில் ஆசிரியர்கள் தங்களின் கற்பித்தலை மேலும் திறம்படச் செய்வார்கள் என்று நம்புகிறோம். இதன் மூலம் கலை வடிவங்களை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் திறன் கொண்ட திறமையான மாணவர்கள் உருவாவார்கள், மேலும் அவர்கள் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்வார்கள் என்பதே இதன் நோக்கமாகும். இதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து முயற்சி செய்வோம்.

**கலைக் கல்விப் பாடக் குழு**
பாடநூல் நிறுவனம், புனே

| வகுப்பு: 4 ஆம் வகுப்பு | |
|---|---|
| **பாடம்: காட்சிக்கலை** | |
| **பாடத்திட்ட இலக்கு: CG–1:** கலையின் மூலம் மனித உணர்வுகளை ஆராய்தல், சிந்தித்தல் மற்றும் வெளிப்படுத்து வதற்கான தன்னம்பிக்கையை வளர்த்தல். | |
| **திறன்: C–1.1:** அன்றாட வாழ்க்கையில் உள்ள உணர்வுகள் மற்றும் கற்பனைகளைத் தூண்டும் பல்வேறு தலைப்புகளை ஆர்வத்துடன் வரைதல். | |
| **வரிசை எண்** | **கற்றல் விளைவு** |
| 04AE01 | சுற்றியுள்ள பகுதியில் உள்ள சிறிய கூறுகளை அடிப்படையாகக் கொண்டு நினைவூட்டும் வரைபடம் வரைதல். |
| 04AE02 | பல்வேறு கற்பனைக் கதைகளில் உள்ள நிகழ்வுகளைத் தன் சொந்தக் கற்பனையின் மூலம் சித்திரமாக வரைதல். |
| 04AE03 | இயற்கைக் கூறுகளின் பல்வேறு வடிவங்களை அழகியல் வடிவமைப்புகளில் (Motifs) கற்பனைத் திறனுடன் பயன்படுத்துதல். |
| 04AE04 | சுற்றியுள்ள பகுதியில் உள்ள சிறிய கூறுகளை நினைவுகூர்ந்து வரைதல். |
| **திறன்: CG–1.2:** காட்சிக் கலையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி வேலை செய்யும்போது, பல்வேறு கற்பனைகள் மற்றும் எதிர்வினைகளைத் தாராளமாகப் பயன்படுத்துதல். | |
| 04AE05 | எண்கள்/எழுத்துக்களின் வளைவுகளைப் பழகி எழுதுதல். |
| 04AE06 | எண்கள்/எழுத்துக்களின் விகிதாச்சாரத்தைப் புரிந்து கொண்டு எழுதுதல். |
| 04AE07 | வெளிப்பாட்டின் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி எண்கள்/எழுத்துக்களை வடிவமைத்தல். |
| **பாடத்திட்ட இலக்கு: CG–2:** கலையின் பயிற்சிக்காகத் தன் கற்பனைத்திறன் மற்றும் படைப்பாற்றலைத் தாராளமாகப் பயன்படுத்துதல், வடிவவியல் வடிவங்கள், சூழலில் உள்ள பொருட்களின் வடிவங்களுக்கு இடையே உள்ள தொடர்பைப் புரிந்து கொண்டு, காட்சி கூறுகளின் (கோடு, வடிவம், வண்ணம், விண்வெளி, துகளமைப்பு) பல்வேறு சேர்க்கைகளைப் படைப்பாற்றலுடன் பயன்படுத்துதல். | |
| **திறன்: C–2.1:** அன்றாட உற்றுநோக்கல், தனிப்பட்ட அனுபவங்கள் மற்றும் உணர்வுகளைக் காட்சி கூறுகளின் பல்வேறு சேர்க்கைகள் (கோடு, வடிவம், வண்ணம், விண்வெளி, துகளமைப்பு) மூலம் படைப்பாற்றலுடன் பயன்படுத்துதல். | |
| 04AE08 | பல்வேறு வகையான கோடுகளை வரைதல். |
| 04AE09 | வடிவியல் கருவிகளின் உதவியின்றி பல்வேறு வடிவங்களை எளிய முறையில் வரைதல். |
| 04AE10 | அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் தெரிந்த பொருட்களை எளிய முறையில் வரைதல். |
| **திறன்: CG–2.2:** வகுப்பில் பகிரப்பட்ட கலைப்படைப்புகளின் காட்சி கூறுகள், கருத்துக்கள் மற்றும் முரண்பாடு களைத் தெளிவுபடுத்துதல். | |
| 04AE11 | வடிவவியல் வடிவங்கள் மற்றும் சூழலில் உள்ள பொருட்களின் வடிவங்களுக்கு இடையே உள்ள தொடர்பை ஒப்பிட்டு வேறுபாடுகளை விளக்குதல். |
| 04AE12 | உற்றுநோக்கல் மூலம் அனுபவித்தப் பொருட்களை வகைப்படுத்தி வரைதல். |
| 04AE13 | தன் சொந்தக் கற்பனைகளைத் தாராளமாகப் புரிந்துகொண்டு விவரித்தல். |
| **பாடத்திட்ட இலக்கு: CG–3:** கலையின் அடிப்படைக் கோட்பாடுகள், பொருட்கள் மற்றும் நுட்பங்களை வெளிப்படுத்துதல். | |
| **திறன்: C–3.1:** காட்சிக் கலையில் வேலை செய்யும்போது பயன்படுத்தப்படும் பொருட்கள், கருவிகள் மற்றும் நுட்பங்களைத் தேர்ந்தெடுத்தல். | |
| **வரிசை எண்** | **கற்றல் விளைவு** |
| 04AE14 | அச்சுப் பதிப்பிற்காக பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்துதல். |
| 04AE15 | பல்வேறு வகையான துகளமைப்புகளை (Textures) உருவாக்குதல். |
| **திறன்: C–3.2:** தனிநபர் மற்றும் குழுவாகக் காட்சிப் கலைப் படைப்புகளை உருவாக்கும்போது திட்டமிடல், செயல்படுத்துதல் மற்றும் வழங்குதல் ஆகிய படிகளைப் பின்பற்றுதல். | |
| 04AE16 | கிடைக்கக்கூடிய பொருட்கள்/வளங்களைக் கற்பனைத்திறனுடன் பயன்படுத்தி அலங்கரித்தல். |
| 04AE17 | சூழலில் கிடைக்கக்கூடிய சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களைக் கொண்டு முப்பரிமாண (3D) வடிவங்களை உருவாக்குதல். |
| 04AE18 | களிமண் மூலம் முப்பரிமாண வடிவங்களின் குறியீடுகளை உருவாக்குதல். |
| **பாடத்திட்ட இலக்கு: CG–4:** சுற்றியுள்ள இயற்கையின் அழகைக் கண்டறிதல் மற்றும் பல்வேறு உள்ளூர் கலை வடிவங்கள் மற்றும் கலாச்சார மரபுகள் மீது ஆர்வத்தை உருவாக்குதல். | |
| **திறன்: C–4.1:** இயற்கையில் உள்ள காட்சி கூறுகளை அடையாளம் கண்டு, அவற்றின் கலைத்துவப் பண்புகளை விவரித்தல். | |
| 04AE19 | இயற்கையில் உள்ள கூறுகளின் கலைத்துவ மற்றும் அழகியல் சிறப்பம்சங்களை விவரித்தல். |
| **திறன்: C–4.2:** உள்ளூர் கலை வடிவங்கள் மற்றும் கலாச்சாரம் பற்றி ஆர்வம் காட்டுதல். | |
| 04AE20 | உள்ளூர் கலை வடிவங்களில் தனக்குப் பிடித்தக் கலை வடிவத்தின் கூறுகளைப் படங்கள், புகைப்படங்கள், துண்டுப் பிரசுரங்களாகச் சேகரித்துத் திட்டப் பணிகளைச் செய்தல். |
| 04AE21 | பல்வேறு கலைஞர்களை உள்ளூர் கலை-கலாச்சாரத்துடன் தொடர்புபடுத்தித் தகவல்களை விளக்குதல். |

<table>
<tr><th colspan="2">பாடம்: நாடகம்</th></tr>
<tr><td colspan="2">பாடத்திட்ட இலக்கு: CG-1: கலையின் மூலம் மனித உணர்வுகளை சுய ஆய்வு செய்தல், வழங்குதல் மற்றும் வெளிப்படுத்துவதற்கான தன்னம்பிக்கையை வளர்த்தல்.</td></tr>
<tr><td colspan="2">திறன்: C–1.1: நாடகத்தில் உள்ள சூழல்கள் மற்றும் அனுபவங்கள், அதே போல் பல்வேறு பாத்திரங்களை ஆர்வத்துடன் வழங்குதல்.</td></tr>
<tr><td>04AE22</td><td>சுற்றியுள்ள அன்றாட நிகழ்வுகளை உற்றுநோக்கி நடித்துக் காட்டுதல்.</td></tr>
<tr><td colspan="2">திறன்: C–1.2: நாடகக் கலையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி வேலை செய்யும்போது, சுய எண்ணங்கள் மற்றும் எதிர்வினைகளைப் பற்றி விவாதித்தல்.</td></tr>
<tr><td>04AE23</td><td>சுற்றியுள்ள தெரிந்த மனிதர்கள் அல்லது தொழில் செய்பவர்களின் குரல்களைக் கவனித்து, அவர்களைப் போலவே அச்சு அசலாகப் பேசிக் காட்டுதல்.</td></tr>
<tr><td>04AE24</td><td>சக நண்பர்கள் வழங்கிய நாடக அசைவுகளைக் கவனித்து, அதற்கான கருத்துக்களைக் கூறுதல்.</td></tr>
<tr><td colspan="2">பாடத்திட்ட இலக்கு: CG–1.2: கலையின் பயிற்சிக்காகத் தன் கற்பனைத்திறன் மற்றும் படைப்பாற்றலைத் தாராளமாகப் பயன்படுத்துதல், அன்றாட உற்றுநோக்கல், தனிப்பட்ட அனுபவங்கள் மற்றும் உணர்வுகளைச் சித்தரிக்கும் போது காட்சி கூறுகளின் பல்வேறு சேர்க்கைகளைப் படைப்பாற்றலுடன் பயன்படுத்துதல்.</td></tr>
<tr><td colspan="2">திறன்: C–2.1: நாடகத்திற்குத் தேவையான பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தாளத்தைக் கொண்டு நாடகப் பின்னணி இசையை உருவாக்குதல்.</td></tr>
<tr><td>04AE25</td><td>நாடகத்தை வழங்குவதற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைச் சேகரித்தல்.</td></tr>
<tr><td>04AE26</td><td>நாடகப் பயிற்சி மற்றும் தயாரிப்பிற்கான பொருட்களைச் சேகரித்து, அவற்றைச் சரியான முறையில் அடுக்குதல்.</td></tr>
<tr><td>04AE27</td><td>சுற்றப்புறத்தில் கிடைக்கக்கூடிய பொருட்கள் அல்லது ஒலி எழுப்பும் பொருட்களைச் சேகரித்து, நாடகத்திற்கான பின்னணி இசையை உருவாக்குதல்.</td></tr>
<tr><td colspan="2">திறன்: C–2.1: பல்வேறு பாத்திரங்கள், பாத்திரப் பொறுப்புகள், சூழல்கள், இடவெளி மற்றும் மேடையில் உள்ள பொருட்களை ஒன்றிணைத்து அன்றாட நிகழ்வுகளின் அடிப்படையில் நாடகத்தை உருவாக்கி வகுப்பில் வழங்குதல்.</td></tr>
<tr><td>04AE28</td><td>நாடகம் வழங்கிய பிறகு நடத்தப்பட்ட விவாதத்தில் வந்த ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு, மீண்டும் சிறப்பாக நடித்துக் காட்டுதல்.</td></tr>
<tr><td>04AE29</td><td>மற்றவர்கள் வழங்கிய நாடகத்தின் மீது தனிப்பட்ட முறையில் அல்லது குழுவாகத் தன் கருத்துக்களை வெளிப்படுத்துதல்.</td></tr>
<tr><td colspan="2">பாடத்திட்ட இலக்கு: CG–3: கலையின் அடிப்படைக் கோட்பாடுகள், செயல்முறைகள், பொருட்கள் மற்றும் நுட்பங்களை வெளிப்படுத்துதல்.</td></tr>
<tr><td colspan="2">திறன்: C–3.1: நாடகக் கலையில் வேலை செய்யும்போது பயன்படுத்தப்படும் மாற்றுப் பொருட்கள், சாதனங்கள் மற்றும் நுட்பங்களைத் தேர்ந்தெடுத்தல்.</td></tr>
<tr><td>04AE30</td><td>பல்வேறு நாடகக் காட்சிகளில் தேவையான பொருட்களுக்கு மாற்றாகப் பயன்படுத்தக்கூடிய இதரப் பொருட்களை உருவாக்குதல்.</td></tr>
<tr><td>04AE31</td><td>நாடகத்தில் உள்ள பாத்திரங்களுக்கு ஏற்ப உடைகளைத் தேர்வு செய்து, நாடகத்தை வழங்குதல்.</td></tr>
<tr><td>04AE32</td><td>நாடகத்தில் வரும் பாத்திரங்களின் தேவைக்கு ஏற்ப காகித முகமூடிகளைத் (Paper Masks) தயாரித்தல்.</td></tr>
<tr><td colspan="2">திறன்: C–3.2: தனிநபர் மற்றும் குழுவாக நாடகங்களை வழங்கும்போது திட்டமிடல், செயல்படுத்துதல் மற்றும் வழங்குதல் ஆகிய படிகளைப் பின்பற்றுதல்.</td></tr>
<tr><td>04AE33</td><td>தனிநபர் அல்லது குழு நாடகங்களைச் சக நண்பர்களுடன் இணைந்து தொடர் பயிற்சி செய்தல்.</td></tr>
<tr><td>04AE34</td><td>தொழில்நுட்பக் கூறுகள் (ஒலி, ஒளி போன்றவை) உதவியுடன் நாடகப் பயிற்சியைச் செய்தல்.</td></tr>
<tr><td colspan="2">பாடத்திட்ட இலக்கு: CG–4: சுற்றியுள்ள இயற்கையின் அழகைக் கண்டறிதல் மற்றும் பல்வேறு உள்ளூர் கலை வடிவங்கள் மற்றும் கலாச்சார மரபுகள்/பழக்கவழக்கங்கள் மீது ஆர்வத்தை உருவாக்குதல்.</td></tr>
<tr><td colspan="2">திறன்: C–4.1: இயற்கையில் உள்ள நாடகக் கூறுகள் மற்றும் அசைவுகளை அடையாளம் கண்டு, அவற்றின் கலைத்துவப் பண்புகளை விவரித்தல்.</td></tr>
<tr><td>04AE35</td><td>இயற்கையின் பல்வேறு பொழுதுகளை (காலை, மாலை போன்றவை) நாடகத்தில் காட்ட இயற்கை ஒளியைப் பயன்படுத்துதல்.</td></tr>
<tr><td>04AE36</td><td>பாடப்புத்தகத்தில் உள்ள பாடங்கள் அல்லது கவிதைகளை நாடகமாக மாற்றும்போது இயற்கையான பொருட்களைப் பயன்படுத்துதல்.</td></tr>
<tr><td>04AE37</td><td>மனித உடலின் அசைவுகள் மூலம் இயற்கைக் கூறுகளின் (மரம், விலங்கு போன்றவை) வடிவங்களை உருவாக்குதல்.</td></tr>
<tr><td colspan="2">திறன்: C–4.2: உள்ளூர் கலைஞர்கள் மற்றும் கலாச்சாரம் பற்றி ஆர்வம் காட்டுதல்.</td></tr>
<tr><td>04AE38</td><td>சுற்றியுள்ள பகுதியில் நடைபெறும் பண்டிகைகள் மற்றும் திருவிழாக்களைக் கவனித்து மகிழ்தல்.</td></tr>
<tr><td>04AE39</td><td>உள்ளூர் நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் அவர்களின் கலை பற்றிய தகவல்களை அறிந்து, அதற்குச் சரியான முறையில் மதிப்பளித்தல்.</td></tr>
</table>

| | |
|---|---|
| **பாடம்: இசை** | |
| **பாடத்திட்ட இலக்கு: CG-1:** கலையின் மூலம் மனித உணர்வுகளை சுய ஆய்வு செய்தல், வழங்குதல் மற்றும் வெளிப்படுத்துவதற்கான தன்னம்பிக்கையை அனுபவங்களின் வாயிலாக வளர்த்தல். | |
| **திறன்: C-1.1:** தனக்குத் தெரிந்த இசைக்கலைகளைப் பயிற்சி செய்து, ஆர்வத்துடன் வழங்குதல்.<br>வரிசை எண் / கற்றல் விளைவு | |
| 04AE40 | தனக்குத் தெரிந்த இசையைக் கவனமாகக் கேட்டு, அதற்கேற்ப பாடி அல்லது வாசித்து வழங்குதல். |
| 04AE41 | பாடல்களைப் பயிற்சி செய்யும்போது கைகளைத் தட்டுதல் மற்றும் தாளக் கட்டைகளைப் பயன்படுத்துதல். |
| **திறன்: C-1.2:** இசைக் கலையில் குழுவாக வேலை செய்யும்போது, சுய எண்ணங்கள் மற்றும் எதிர்வினைகளைப் பற்றி விவாதித்தல். | |
| 04AE42 | தேசபக்திப் பாடல்கள் மூலம் தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை உணர்தல். |
| **பாடத்திட்ட இலக்கு: CG-2:** கலையின் பயிற்சிக்காகத் தன் கற்பனைத்திறன் மற்றும் படைப்பாற்றலைத் தாராளமாகப் பயன்படுத்துதல், பல்வேறு வகையான பாடுதல், வாசித்தல் (தனிநபர், இரட்டையர் மற்றும் குழு) ஆகியவற்றின் பல்வேறு சேர்க்கைகளில் இசைப் பயிற்சிகளைச் செய்தல் மற்றும் தாளம், லயம், சுருதி ஆகியவற்றைப் பாடல்களில் ஒருங்கிணைத்தல். | |
| **திறன்: C-2.1:** பல்வேறு வகையான பாடுதல், வாசித்தல் (தனிநபர், ஜோடி மற்றும் குழு) ஆகியவற்றின் சேர்க்கைகளில் பாடல்கள் மற்றும் தாளத்தைப் பயிற்சி செய்து வழங்குதல். | |
| 04AE43 | பாடுதல் மற்றும் வாசித்தலின் லயம் மற்றும் தாளத்தைப் (Theka) புரிந்து கொண்டு, தனிநபராகப் பாடலை வழங்குதல். |
| 04AE44 | பாடுதல் மற்றும் வாசித்தலில் இரட்டையர் மற்றும் குழுவாகப் பல்வேறு வகைகளைப் பயிற்சி செய்து வழங்குதல். |
| **திறன்: C-2.2:** பாடல் மற்றும் உணர்வுகள் ஆகியவற்றின் மூலம் வகுப்பில் வழங்கப்பட்ட பல்வேறு இசைப் பாணிகளில், இசைக் கூறுகளின் (லயம், தாளம், சுருதி, பாவம்) ஒப்பீடு மற்றும் முரண்பாடுகளைக் காட்டுதல். | |
| 04AE45 | வெவ்வேறு வகையான பாடல்களைக் கேட்டு, அவற்றுக்கு இடையே உள்ள வித்தியாசத்தைக் கண்டறிதல். |
| 04AE46 | செவ்வியல் இசையில் உள்ள சுரம் மற்றும் அலங்காரங்கள் (Alankar) பற்றிய தகவல்களைச் சுருக்கமாகக் கூறுதல். |
| **பாடத்திட்ட இலக்கு: CG-3:** கலையின் அடிப்படைக் கோட்பாடுகள், செயல்முறைகள், பொருட்கள் மற்றும் நுட்பங்களை வெளிப்படுத்துதல். | |
| **திறன்: C-3.1:** இசைக் கலையை வழங்கும்போது ஒலிகள், தாளங்கள் மற்றும் இசைச் சேர்க்கைகளுடன் கூடிய சரியான பொருட்களைத் தேர்ந்தெடுத்தல். | |
| 04AE47 | சுற்றியுள்ள சூழலில் உள்ள இசைக்கு உகந்த ஒலிகளைக் கேட்டு, அதனைப் போலச் செய்து காட்டுதல். |
| 04AE48 | கிடைக்கக்கூடிய பொருட்களைப் பயன்படுத்தி வாசித்து வழங்குதல். |
| **திறன்: C-3.2:** வழங்குதல் மற்றும் பயிற்சியில் பங்கேற்பதற்காக இசையைத் தேர்ந்தெடுப்பதில் பல்வேறு யோசனைகளை வழங்குதல். | |
| 04AE49 | அபங்கம் (Abhang) மற்றும் போவாடா (Powada) போன்ற கலைகளை வழங்குவதற்குப் பொருத்தமான இசைக்கருவிகளைத் தேர்வு செய்து பயன்படுத்துதல். |
| **பாடத்திட்ட இலக்கு: CG-4:** வட்டாரக் கலைகள் மற்றும் கலாச்சார மரபுகளில் உள்ள அழகியல் சார்ந்த உணர்வுகளைத் தன்னுள் வளர்த்துக் கொள்ளுதல். | |
| **திறன்: C-4.1:** இயற்கையில் உள்ள இசைக்ககூறுகளை அடையாளம் கண்டு, அவற்றின் கலைத்துவப் பண்புகளை விவரித்தல். | |
| 04AE50 | இயற்கையில் உள்ள பல்வேறு ஒலிகளைக் கவனித்து, அவற்றைப் போலக் குரல் எழுப்புதல். |
| 04AE51 | உள்ளூர் திருவிழாக்கள் மற்றும் பண்டிகைகள் சார்ந்த இசையைப் பற்றிய தகவல்களைக் கூறுதல். |
| **திறன்: C-4.2:** உள்ளூர் கலைஞர்கள் மற்றும் கலாச்சாரம் பற்றி ஆர்வம் காட்டுதல். | |
| 04AE52 | உள்ளூர் பாரம்பரியக் கலைஞர்களைப் பற்றிய தகவல்களைக் கூறுதல். |
| 04AE53 | உள்ளூர் பாரம்பரிய இசையின் மூலம் மக்களின் வாழ்வியல் மற்றும் கலாச்சாரப் பின்னணியை விளக்குதல். |

<table>
<tr><th colspan="2">பாடம்: நடனம் மற்றும் அசைவுகள்</th></tr>
<tr><td colspan="2">பாடத்திட்ட இலக்கு: CG-1: கலையின் மூலம் மனித உணர்வுகளை சுய ஆய்வு செய்தல், வழங்குதல் மற்றும் வெளிப்படுத்துவதற்கான தன்னம்பிக்கையை அனுபவங்களின் வாயிலாக வளர்த்தல்.</td></tr>
<tr><td colspan="2">திறன்: C–1.1: தனக்குத் தெரிந்த நடன அசைவுகளைப் பயிற்சி செய்து, ஆர்வத்துடன் மேடையில் வழங்குதல்.</td></tr>
<tr><td>04AE54</td><td>தெரிந்த நடனத்தில் உள்ள உடல் அசைவுகளை வரிசையாக, தாளம் மற்றும் லயத்துடன் வழங்குதல்.</td></tr>
<tr><td colspan="2">திறன்: C–1.2: நடனம் மற்றும் அசைவுகளில் குழுவாக வேலை செய்யும்போது, சுய எண்ணங்கள் மற்றும் எதிர்வினைகளைப் பற்றி விவாதித்தல்.</td></tr>
<tr><td>04AE55</td><td>நடனம் மற்றும் அசைவுகளின் குழு செயல்பாடுகளில் ஒருங்கிணைந்து பங்கேற்றல்.</td></tr>
<tr><td colspan="2">பாடத்திட்ட இலக்கு: CG–2: கலையின் பயிற்சிக்காகத் தன் கற்பனைத்திறன் மற்றும் படைப்பாற்றலைத் தாராளமாகப் பயன்படுத்துதல்.</td></tr>
<tr><td colspan="2">திறன்: C–2.1: அன்றாடச் செயல்பாடுகள் மற்றும் தனிப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் நடனம் மற்றும் அசைவுகளின் வரிசையை உருவாக்கி வழங்குதல்.</td></tr>
<tr><td>04AE56</td><td>அன்றாட வாழ்க்கையில் செய்யப்படும் உடல் அசைவுகளை நடன வடிவில் தாளத்துடன் மேடையில் வழங்குதல்.</td></tr>
<tr><td colspan="2">திறன்: C–2.2: வகுப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு நடனம் மற்றும் அசைவு பாணிகளில் உள்ள வெளிப்பாடுகள், முத்திரைகள் (Mudras) மற்றும் கருப்பொருள்களின் ஒற்றுமை, வேற்றுமைகளை ஆராய்தல்.</td></tr>
<tr><td>04AE57</td><td>நடன அசைவுகளின் மூலம் இரண்டு வெவ்வேறு தாளங்களை (Taal) புரிந்து கொண்டு, அவற்றை ஒப்பிடுதல்.</td></tr>
<tr><td colspan="2">பாடத்திட்ட இலக்கு: CG–3: கலையின் அடிப்படைக் கோட்பாடுகள், செயல்முறைகள், பொருட்கள் மற்றும் நுட்பங்களை வெளிப்படுத்துதல்.</td></tr>
<tr><td colspan="2">திறன்: C–3.1: நடனத்தில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள், உடைகள், ஒப்பனை மற்றும் இதர மேடை ஏற்பாடுகளைத் தேர்ந்தெடுத்தல்.</td></tr>
<tr><td>04AE58</td><td>நடனத்தை அமைப்பதற்காகப் பாடல்கள் மற்றும் இசைக்கருவிகளைத் தேர்ந்தெடுத்தல்.</td></tr>
<tr><td>04AE59</td><td>நடனத்தில் பயன்படுத்துவதற்குக் கருப்பொருளுக்கு ஏற்ப பல்வேறு உடல் அசைவுகளைத் தேர்ந்தெடுத்தல்.</td></tr>
<tr><td colspan="2">திறன்: C–3.2: நடனம் மற்றும் அசைவுகளின் வரிசையைத் தேர்ந்தெடுக்கும்போதும், பயிற்சி மற்றும் மேடை வழங்கலில் பங்கேற்கும்போதும் தன் கற்பனைத் திறனைப் பங்களித்தல்.</td></tr>
<tr><td>04AE60</td><td>தன் சொந்தக் கற்பனைக்கு ஏற்ப, திரைக்குப் பின்னால் (Shadow Dance / நிழல் நடனம்) நடனம் மற்றும் அசைவுகள் மூலம் வழங்குதல்.</td></tr>
<tr><td colspan="2">பாடத்திட்ட இலக்கு: CG–4: வட்டாரக் கலைகள் மற்றும் கலாச்சார மரபுகளில் உள்ள அழகியல் சார்ந்த உணர்வுகளைத் தன்னுள் வளர்த்துக் கொள்ளுதல்.</td></tr>
<tr><td colspan="2">திறன்: C–4.1: இயற்கையில் உள்ள இசை/நடனக் கூறுகளை அடையாளம் கண்டு, அவற்றின் கலைத்துவப் பண்புகளை விவரித்தல்.</td></tr>
<tr><td>04AE61</td><td>நடனத்தில் உள்ள அசைவுகளையும் இயற்கையில் உள்ள அசைவுகளையும் ஒப்பிட்டு, அவற்றின் கலைத்துவப் பண்புகளை விவரித்தல்.</td></tr>
<tr><td colspan="2">திறன்: C–4.2: உள்ளூர் கலைஞர்கள் மற்றும் கலாச்சாரம் பற்றி ஆர்வம் காட்டுதல்.</td></tr>
<tr><td>04AE62</td><td>கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் உள்ளூர் பாரம்பரியக் கலை வடிவங்களை ஆர்வத்துடன் வழங்குதல்.</td></tr>
</table>

# राज्यगीत

जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।धृ।।

भिती न आम्हा तुझी मुळी ही गडगडणाऱ्या नभा
अस्मानाच्या सुलतानीला जबाब देती जिभा
सह्याद्रीचा सिंह गर्जतो शिव शंभू राजा
दरी दरीतून नाद गुंजला महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।१।।

काळ्या छातीवरी कोरली, अभिमानाची लेणी
पोलादी मनगटे खेळती, खेळ जीवघेणी
दारिद्र्याच्या उन्हात शिजला
निढळाच्या घामाने भिजला
देश गौरवासाठी झिजला
दिल्लीचे ही तख्त राखितो, महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा ।।२।।

# பொருளடக்கம்

## காட்சிக்கலை


| பிரிவு | பக்கம் |
|---|---|
| 1. அழகிய வடிவமைப்புகளின் விந்தை | 01 |
| 2. எழுத்துகளின் உலகில் | 10 |
| 3. பொருள்களின் உலகில் | 14 |
| 4. எனது ஓவியமும் எனது கற்பனையும் | 17 |
| 5. முப்பரிமாணக் கலைப்படைப்பு | 21 |


## நாடகம்


| பிரிவு | பக்கம் |
|---|---|
| 6. வாருங்கள் நடித்துப் பார்ப்போம் | 26 |
| 7. நாடகத்திற்கு தயாராவோம் | 31 |
| 8. வாருங்கள் மேடையேறுவோம் | 38 |


## இசை


| பிரிவு | பக்கம் |
|---|---|
| 9. அனைவரும் சேர்ந்து பாடுவோம்! | 45 |
| 10. தனிநபர், இருவர் மற்றும் குழுப் பாடல் | 51 |
| 11. பாரம்பரியப் பாடல்கள் | 57 |
| 12. இசையொலிக் கொடி | 64 |
| 13. வாருங்கள் தாளம் போடுவோம்! | 67 |


## நடனம்


| பிரிவு | பக்கம் |
|---|---|
| 14. மகிழ்வுடன் நடனமாடுவோம் | 73 |
| 15. நடனமயமான வாழ்க்கை | 78 |
| 16. நடனத்தின் துணைவர் | 83 |
| 17. பாரம்பரிய நடனம் | 87 |
| 18. கலைப் பண்பாடு | 91 |

# காட்சிக்கலை



# 1. அழகிய வடிவமைப்புகளின் விந்தை

வரைதல் என்பது கோடுகளின் பல்வேறு அமைப்புகளைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் ஒரு வரைபடமாகும். ஓவியக் கலையில் வரைதலுக்கு மிக முக்கிய இடமுண்டு. கோடுகளைப் பயன்படுத்தி நாம் பல்வேறு வடிவங்கள், படங்கள் மற்றும் பொருட்களை வரையலாம். வரைதல் பயிற்சி ஓவியங்களை வரைவதற்கான தன்னம்பிக்கையை வளர்க்கிறது.

வடிவமைப்புகளை உருவாக்கும் போது கோடுகளின் பயன்பாடு மிகவும் முக்கியமானது. வெவ்வேறு கோடுகளைப் பயன்படுத்தி அழகான வடிவங்களை உருவாக்க முடியும். பூக்கள், இலைகள், வடிவியல் மற்றும் அலங்கார வடிவங்களில் கவர்ச்சியான வடிவங்கள் உருவாக்கப்படுகின்றன. வரைதல் பயிற்சி செய்வதன் மூலம், இன்னும் அழகான மற்றும் கவர்ச்சியான வடிவங்களை உருவாக்க முடியும். வரைதல் என்பது வடிவங்களை உருவாக்குவதற்கான அடிப்படை கருவியாகும்.

வடிவமைப்பில் பல்வேறு கோடுகள், வடிவங்கள், வண்ணங்கள், அமைப்புகள் மற்றும் அச்சுகளைப் பயன்படுத்தி ஒரு கவர்ச்சியான மற்றும் அழகான படத்தை உருவாக்க முடியும்.

இயற்கையில் உள்ள பல்வேறு கூறுகளைப் பயன்படுத்தியும் அழகான கலைப் படைப்புகளை உருவாக்க முடியும். இதனால் நமது கற்பனைத் திறனும், அழகியல் உணர்வும் வளர்கிறது.

## கோடுகளுடன் விளையாடுவோம்.

**கோடுகளின் வகைகள் மற்றும் அவற்றின் மாதிரிகளைச் சரியாகப் பொருத்துக:**

| குழு 'அ' | குழு 'ஆ' |
|---|---|
| **கோடுகளின் வகைகள்** | **கோடுகளின் மாதிரிகள்** |
| 1. அலை வடிவக் கோடுகள்- | அ. \\\\\\\\\\\\\\\\\\\\\\\ |
| 2. செங்குத்துக் கோடுகள்- | ஆ. ----------------------- |
| 3. கிடைமட்டக் கோடுகள்- | இ.  |
| 4. சாய்வுக் கோடுகள்- | ஈ.  |
| 5. துண்டுக் கோடுகள்- | உ. ________________________ |

- மாணவர்களுக்கு எளிய கோடுகளில் தொடங்கி, படிப்படியாக வடிவங்களையும் மாதிரிகளையும் உருவாக்க வழிகாட்ட வேண்டும்.
- பென்சில்/பேனா தவிர வேறு ஏதேனும் கருவிகளைப் பயன்படுத்தியும் கோடுகளின் வகைகளைப் பயிற்சி செய்ய வைக்க வேண்டும்.

CG –2
C– 2.1
LO–04AE08

**• படத்தில் உள்ள பல்வேறு கூறுகள்/பொருட்களைப் பார்த்து, அவற்றில் உள்ள கோடுகளின் வகைகளைக் கண்டறிந்து எழுதவும்.**

1. முறுக்கு



................................................

2. கடல் அலை



................................................

3. உயரமான கட்டிடம்



................................................

4. எறும்புகளின் வரிசை



................................................

**• கோடுகளைப் பயன்படுத்தி கலைப்படைப்பை முழுமையாக்குவோம்.**

**அருகில் கொடுக்கப்பட்டுள்ள 'அ' படத்தை உற்று நோக்குங்கள். பல்வேறு கோடுகளைப் பயன்படுத்தி 'ஆ' கலைப்படைப்பை முழுமையாக்குங்கள்.**



படம் அ.



படம் ஆ.

• வடிவமைப்புகளை உருவாக்கும் போது மாணவர்களின் சொந்த கற்பனைத் திறனை ஊக்குவிக்க வேண்டும். குறிப்புக்காக சேகரிக்கப்பட்ட மாதிரிப் படங்கள் மற்றும் வீடியோக்களைக் காட்ட வேண்டும்.

CG –2
C– 2.1
LO–04AE08

• உடனுள்ள பெரிய சதுரத்தில் உள்ள ஒவ்வொரு சிறிய சதுரத்திலும் பல்வேறு கோட்டு வகைகளைப் பயன்படுத்திப் படத்தை முழுமையாக்குங்கள்.



• வடிவமைப்பை நிறைவு செய்யவும்.

எண் மற்றும் எழுத்துகளிலிருந்து கோட்டின் இடது பக்க அமைப்பு கொடுக்கப்பட்டுள்ளது; அதைப் போலவே வலது பக்கத்தில் பிரதிபலிப்பு அமைப்பை வரையுங்கள்.





கீழே உள்ள வடிவமைப்பை முழுமையாக்கி அதில் விருப்பமான நிறங்களை நிரப்புங்கள்.



• கோடுகளைப் பயிற்சி செய்து அலங்கார வேலைப்பாடு செய்ய ஊக்குவிக்க வேண்டும்.

CG -1/2
C- 1.2/2.1
LO-04AE07 /08

**இயற்கை வடிவங்களின் வடிவமைப்பை உருவாக்குவோம்.**

**இலை, மலர் அல்லது வெவ்வேறு இயற்கை வடிவங்களைப் பயன்படுத்தி வடிவமைப்பை முழுமையாக்குங்கள். விருப்பப்படி அடர் அல்லது வெளிர் நிறத்தில் வண்ணம் தீட்டுங்கள்.**



**நினைவில் கொள்க:**

ஒன்று அல்லது இரண்டு வடிவங்களை மீண்டும் மீண்டும் வரைந்து நிறம் நிரப்பினால் அழகான அலங்கார வேலைப்பாடு உருவாகிறது.

**வடிவமைப்பிலிருந்து அலங்கார வேலைப்பாட்டை உருவாக்குவோம்.**

1. **கொடுக்கப்பட்ட வடிவமைப்புகளில் பொருத்தமானதைப் பயன்படுத்திக் கீழே உள்ள படத்தை முழுமையாக்குங்கள்.**





2. **ஓவியக்கலைநோட்டில்சேலையின்ஓரத்திற்காகஅலங்காரவேலைப்பாட்டை உருவாக்கி கவர்ச்சிகரமான நிறங்களை நிரப்புங்கள்.**

- இச்செயல்பாட்டைச் செய்யும்போது மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

CG –1
C– 1.1
LO–04AE03

## இழையமைப்பு மற்றும் புடைப்பு வேலைப்பாடு

- **பொருட்களை நேரடியாகத் தொட்டு அவை எப்படி இருக்கின்றன என விவரியுங்கள்.**

  எ.கா. கண்ணாடி, பருத்தி, துணி, கல், இலை. தொடுதலின் மூலம் உணரப்படும் இந்தத் தன்மையை ஓவிய மொழியில் நயம் என்கிறோம்.
- தொட்டவுடன் கரடுமுரடாக, மென்மையாக, கூராக, மிருதுவாக உணரப்படுவதை **'தொடு உணர் நயம்'** என்கிறோம்.
- வெறும் கண்களால் கரடுமுரடாக/மென்மையாகத் தோன்றுவதை **'காட்சி நயம்'** என்கிறோம். பதித்த அச்சுகளையும் அமைப்பாகப் பயன்படுத்தலாம்.

## அச்சுகளை அடையாளம் காண்க

கீழுள்ள படங்களின் அச்சு/முத்திரைகள் எதனுடையவை என அடையாளம் கண்டு படத்தின் கீழே எழுதுங்கள்.






______ ______ ______ ______

- பல்வேறு பொருட்களின் அச்சுகளைக் காகிதத்தில் எடுக்கலாம். எ.கா.கோணிப்பை, உருளைக்கிழங்கு, விரல் அச்சுகள்.
- வேறு எந்தப் பொருட்களின் அச்சுகளை எடுக்கலாம் என்று பட்டியலிடுங்கள்.

**நினைவில் கொள்க:**
அச்சு வேலைக்கு நீர்வண்ணங்களைப் பயன்படுத்த வேண்டும்; நிறங்கள் மிக நீர்த்துப் போகாமல் கவனமாக இருக்க வேண்டும்.

- பல்வேறு நயங்களைப் பயன்படுத்தி அலங்கார வடிவமைப்புகளை மாணவர்களுக்குக் கற்றுத்தர வேண்டும்.

CG -3
C- 3.1
LO-04AE14
LO-04AE15

## அச்சுகளிலிருந்து அலங்கார வடிவமைப்பு:

**உங்கள் நோட்டுப் புத்தகத்தில் உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒரு பெரிய வடிவத்தை வரையவும். அதில் கிடைக்கக்கூடிய பொருட்களைப் பயன்படுத்தி பல்வேறு வகையான அச்சுகளை வைத்து அழகான வடிவமைப்பை உருவாக்குங்கள்.**

## நயம் மற்றும் ஒட்டுப்படம்

**பல்வேறு வகையான நயங்களைப் பெற்று, அவற்றிலிருந்து ஓர் ஒட்டுப்படத்தை உருவாக்குவோம்.**

நயத்தைப் பெற நாம் வீட்டில் உள்ள பல பொருட்களைப் பயன்படுத்தலாம். உதாரணமாக: வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள், நாணயங்கள், மரப்பட்டை போன்றவை.

பல்வேறு பொருட்களின் மீது காகிதத்தை வைத்து, அதன் மேல் வண்ணப் பென்சில்களைத் தேய்த்து அதன் நயத்தைப் பெறுங்கள். அவற்றின் பல்வேறு வடிவங்களை வெட்டி காகிதத்தில் ஒட்டி, உங்கள் கற்பனைத் திறனைப் பயன்படுத்தி அவற்றை அலங்கார வடிவமைப்புகளில் சேர்க்கவும். இப்போது கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படத்தைப் பாருங்கள். வெறும் நயத்தை உருவாக்குவதாலேயே படத்தின் சுவாரஸ்யம் மிகவும் அதிகரிக்கும்.





- நயத்தை உருவாக்குவது குறித்து குழுவில் கலந்துரையாடலை நடத்த வேண்டும் மற்றும் மாணவர்களின் கற்பனைத் திறனுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

CG -3
C-3.1
LO-04AE14
LO-04AE15

### செயல்பாட்டைச் செய்து பார்ப்போம்!

செய்து பார்ப்போம்!பெரிய தண்டு (மரப்பட்டை) கொண்ட ஒரு மரத்தின் படத்தை வரையவும். மரத்தின் இலைகள், காய்களின் தோல்கள், கோலமாவு, மண், மணல், குச்சிகள் ஆகியவற்றில் எந்தப் பொருட்களைப் பயன்படுத்தினால் மரத்தின் தண்டின் நயத்தை ஏற்படுத்த முடியும் என்பதை அடையாளம் காணவும்.இந்தச் செயல்பாட்டை உங்கள் ஓவிய நோட்டுப்புத்தகத்தில் செய்யவும்.

### இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி வடிவங்களை உருவாக்குவோம்.

இயற்கையான பொருட்களைப் பயன்படுத்தி நமக்கு விருப்பமான வடிவங்களை/ கோலங்களை உருவாக்குவோம். (எடுத்துக்காட்டாக: சங்கு, சிப்பிகள், இலைகள், பூக்கள், கற்கள் போன்றவை).











உங்கள் சுற்றுப்புறத்தில் கிடைக்கும் இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி நீங்களும் ஒரு வடிவத்தை உருவாக்கி, அதை உங்கள் ஆசிரியரிடம் காண்பியுங்கள்.

### வாழ்த்து அட்டை தயாரிப்போம்.

கடையில் விற்கும் வாழ்த்து அட்டைகளை வாங்கித் தருவதை விட, நாமே கையால் தயாரித்த வாழ்த்து அட்டையை நம் நண்பர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் அதிக மகிழ்ச்சி அடைவார்கள்.

- இயற்கையிலிருந்து கிடைக்கும் பொருட்களைக் கொண்டு அழகுபடுத்தும் கலைக்கு மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்.
- அவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்குப் பதிலாக, புதிய புதிய முயற்சிகளைச் செய்ய அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

CG –3
C– 3.2
LO–04AE16
LO–04AE17

இயற்கைக் கூறுகளைப் பயன்படுத்தி நண்பர்களுக்கு வாழ்த்து தெரிவிக்க அலங்கார வேலைப்பாடு (வாழ்த்து அட்டை) செய்வோம்.

இதற்கு இலைகள், குச்சிகள், விரல் அச்சுகள், காகிதத் துண்டுகளைப் பயன்படுத்தலாம்.

ஒரு தடிமனான காகிதம் எடுங்கள். அதன் மீது இலைகள், குச்சிகளை மாதிரிப் படத்தைப் போல் ஒட்டி அழகான வாழ்த்து அட்டையை உருவாக்குங்கள்.

**நினைவில் கொள்க:** மரத்திலிருந்து உதிர்ந்த பல்வேறு நிற இலைகளைப் பயன்படுத்த வேண்டும்.









- கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தும் பழக்கத்தை உருவாக்க வேண்டும்.
- குறிப்பிட்ட பொருட்களை வற்புறுத்தக் கூடாது.

CG –1/3
C– 1.1/3.2
LO–04AE03
LO–04AE16

## வண்ணங்களுடன் விளையாடுவோம்!

வாருங்கள்!இன்று நாம் வண்ணங்களின் ஒரு மேஜிக்கைப் பார்க்கப் போகிறோம். இந்தச் செயல்பாட்டைச் செய்வதன் மூலம் நீங்கள் மிகவும் அழகான மற்றும் கவர்ச்சிகரமான வடிவமைப்பை உருவாக்கலாம்.

- முதலில் ஒரு வெற்று காகிதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதை நடுவில் மடித்து மடிப்பு ஏற்படுத்தவும். இப்போது காகிதத்தை மீண்டும் திறக்கவும். காகிதத்தின் ஒரு பக்கத்தில் உங்களுக்குப் பிடித்த நிறத்தின் சிறிய மற்றும் பெரிய துளிகளை ஊற்றவும். அதன் பிறகு, காகிதத்தை மீண்டும் மெதுவாக மடித்து, அதன் மேல் லேசான கையால் அழுத்தவும். இப்போது மெதுவாக காகிதத்தைத் திறந்து பாருங்கள். என்ன ஒரு ஆச்சரியம்! இரு பக்கங்களிலும் முற்றிலும் ஒரே மாதிரியான மற்றும் அழகான வடிவமைப்பு உருவாவதை நீங்கள் காண்பீர்கள்.
- இதேபோல், நீங்கள் வெவ்வேறு வண்ணங்களைப் பயன்படுத்தி புதிய சோதனைகளைச் செய்து பாருங்கள். இதன் மூலம் உங்களுக்கு வண்ணங்களின் முற்றிலும் மாறுபட்ட நயம் கிடைக்கும். இந்த அழகான வடிவமைப்பைப் பயன்படுத்தி உங்கள் நண்பர்களுக்காக அருமையான வாழ்த்து அட்டைகளை உருவாக்கலாம்.



## எனது செயல்பாடு

1. ஒரு காகிதப் பையை உருவாக்கி, அதில் நீங்கள் கற்றுக்கொண்ட நுட்பங்கள் மற்றும் அச்சுக்களைப் (Stamps) பயன்படுத்தி அலங்கரிக்கவும்.
2. பல்வேறு இயற்கை கூறுகள் மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட கூறுகளைப் பயன்படுத்தி அழகான பாடநூல் குறிகள் மற்றும் வாழ்த்து அட்டைகளை உருவாக்கவும்.
3. இலைகள் மற்றும் பூக்களைப் பயன்படுத்தி அலங்காரத்திற்காக வண்ணக் கோலம் தயார் செய்யவும்

- காகிதத்தில் பல்வேறு வண்ணங்களின் புள்ளிகளை இட்டு, மேலே உள்ள செயல்பாட்டைப் போல அழகான கலைப்படைப்பை உருவாக்க வேண்டும்.

CG -3
C-3.1
LO-04AE14
LO-04AE15

# 2. எழுத்துகளின் உலகில்...

குழந்தை நண்பர்களே, ஓவியங்களைப் போலவே நமது கையெழுத்தும் அழகாக இருப்பது மிகவும் முக்கியம். எழுத்து வடிவமைப்பு என்பது சுத்தமாகவும், தெளிவாகவும், படிக்கக்கூடியதாகவும் எழுதுவதற்கான ஒரு கலை. ஆனால் அதற்குப் பயிற்சி மிகவும் அவசியம்.

தடையற்ற அசைவுகளுடன் கோடுகளை வரைவதன் மூலம், கைகளின் மீதான கட்டுப்பாடு அதிகரிக்கிறது மற்றும் எழுத்துக்களை எழுதுவதற்கு அது உதவுகிறது.

**'கோடுகள் மற்றும் எழுத்துக்களைப் பயிற்சி செய்வோம் வாருங்கள்'**







கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு கோடுகளை இரண்டு வரி நோட்டுப் புத்தகத்தில் வரைந்து பயிற்சி செய்யவும்.

நான்கு வரி நோட்டுப் புத்தகத்தில் ஆங்கில எழுத்துக்கள் மற்றும் எண்களை எழுதிப் பயிற்சி செய்யவும்.




இதற்கு முந்தைய வகுப்பில் நாம் தமிழ் எழுத்துக்களின் பாகங்கள், வளைவுகள் போன்றவற்றைப் பயிற்சி செய்துள்ளோம். இந்த ஆண்டு கூட்டெழுத்துச் சொற்களை பயிற்சி செய்வோம். இதனுடன் கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களைப் பார்த்து, அவற்றைக் குறிப்பேட்டில் எழுதிப் பயிற்சி செய்யவும்.

- பல்வேறு வகையான எழுத்து வடிவங்களை எழுதப் பயிற்சி பெற வேண்டும்.
- மாணவர்களுக்கு எழுத்துக்களின் வளைவுகள் மற்றும் எழுதும் முறையை நேரில் செய்து காண்பிக்க வேண்டும்.

CG -1
C- 1.2
LO-04AE05

## பல்வேறு ஊடகங்கள் மூலம் எழுத்துப் பயிற்சி செய்வோம்

பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி எழுத்துக்களைப் பயிற்சி செய்வோம்.

1. காற்றில் விரல்களால் எழுத்துக்களை எழுதி, அதை உங்கள் நண்பர்களைக் கண்டறியச் சொல்லுங்கள்.
2. மணல் அல்லது மண்ணில் எழுத்துக்களை எழுதுங்கள்.
3. பேனா, பென்சில் உதவியுடன் எழுத்துப் பயிற்சி செய்யுங்கள்.
4. ஸ்கெட்ச் பேனா, வண்ணக் சுண்ணக்கட்டி (சாக் பீஸ்) உதவியுடன் எழுதிப் பாருங்கள்.

பென்சில் எழுத்து →

பேனா எழுத்து →

ஸ்கெட்ச் பேனா எழுத்து →

வண்ணக் சுண்ணக்கட்டி எழுத்து →




## பொன்மொழி அட்டைகளைத் தயாரிப்போம் வாருங்கள்

வகுப்பறையில் பெரிய வரைபடங்கள் (சார்ட்டுகள்) அல்லது பொன்மொழி அட்டைகள் ஒட்டப்பட்டிருப்பதை நாம் அடிக்கடி பார்க்கிறோம். அவற்றில் உள்ள எழுத்துக்கள் பெரியதாகவும் தெளிவாகவும் இருப்பது அவசியம். இந்த உபகரணங்களை ஈர்க்கும் வகையில் எவ்வாறு தயாரிப்பது என்பதற்கான பின்வரும் செயல்பாட்டைப் புரிந்து கொண்டு பயிற்சி செய்வோம்.

1. ஒரு மெழுகுவண்ணக் கட்டியை (ஆயில் பேஸ்டல்) எடுத்து அதைச் சாய்வாக வெட்டவும்.
2. வண்ணக் கட்டியை கையில் பிடித்து படத்தில் காட்டியவாறு எழுதப் பழகவும்.
3. பயிற்சி பெற்ற பிறகு, வகுப்பறைக்கான பொன்மொழி அட்டை அல்லது வரைபடத்திற்கான எழுத்துக்களை எழுதவும்.










- பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு எழுத்துப் பயிற்சியை மேற்கொள்ளச் செய்ய வேண்டும்.

CG –1
C– 1.2
LO–04AE05
LO–04AE06

म

## எழுத்தை வரைந்து அலங்கரிப்போம்!

உங்கள் பெயரின் முதல் எழுத்தை வரைந்து விரும்பிய ஊடகத்தால் அலங்கரிங்கள். அதற்கு நூல், இலை-பூக்கள், விதைகள், ரங்கோலி, மணிகள், சணல்நூல் அல்லது பிடித்த பொருளைப் பயன்படுத்துங்கள்.







## தடையற்ற கைவரைதல்

- எண்-எழுத்துகளின் வடிவமைப்பைச் செய்வோம்.
- கோட்டின் இடது பக்கம் கொடுக்கப்பட்ட வடிவத்தைப் பார்த்து வலது பக்கம் வரைந்து வண்ணம் தீட்டுங்கள்.



- எழுத்துகளின் வடிவம், உயரம், இடைவெளியை நடைமுறையில் காட்ட வேண்டும்.

CG -1
C- 1.2
LO-04AE07



## எழுத்துக்கள் மற்றும் எண்களிலிருந்து ஓவியம் வரைவோம்!

எழுத்துக்கள் மற்றும் எண்களைப் பயன்படுத்தி ஓவியம் வரையப் பழகுவோம்.

1. **கீழே உள்ள வாக்கியங்களைச் சீராக எழுதப் பயிற்சி செய்வோம்.**

- எனது கையெழுத்தே எனது அடையாளம்
- இயற்கையே நமது குரு.
- பாரதம் எனது தேசம்.
- INDIA IS MY COUNTRY.
- SAVE TREES, SAVE EARTH.

## எனது செயல்பாடு

1. பாடப்புத்தகத்தில் உள்ள ஏதேனும் ஒரு பத்தி அல்லது கவிதையைப் பேனா, பென்சில், ஸ்கெட்ச் பேனா ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி எழுதவும்.
2. வாழ்த்து அட்டை தயாரித்து, அதில் பொருத்தமான வாக்கியங்களை எழுதவும்.
3. ஏதேனும் ஒரு முழக்க அட்டை தயாரிக்கவும்.
4. கரும்பலகையில் அழகான பெரிய எழுத்துக்களில் பொன்மொழிகளை எழுதவும்.

- அழகான மற்றும் தெளிவான எழுத்திற்கு பென்சிலைச் சரியான முறையில் பிடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.
- நிறையப் பயிற்சி அளிக்க வேண்டும். கரும்பலகையில் எழுதுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும்.
- வெவ்வேறு பாணிகளில் எழுதப் பயிற்சி செய்யுமாறு கூற வேண்டும்.

CG –1
C– 1.2
LO–04AE05
LO–04AE06

# ௩. பொருள்களின் உலகில்

பொருள்களின் ஓவியம் என்பது நம்மைச் சுற்றியுள்ள சூழலில் காணப்படும் பொருட்களை உற்றுநோக்கி, அவற்றை அப்படியே வரைவதாகும். பூக்கள், பழங்கள், பாத்திரங்கள், பொம்மைகள் அல்லது பள்ளிப் பயன்பாட்டுப் பொருள்கள் ஆகியவற்றின் ஓவியங்கள் இதில் அடங்கும். பொருள்களின் ஓவியங்களை வரையும்போது பொருளின் வடிவம், அளவு, நிறம், நிழல் , வெளிச்சம் மற்றும் அதன் தன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும். வண்ணங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பொருள்களின் ஓவியத்தை இன்னும் அழகாக மாற்றலாம்.

பொருள்களின் ஓவியங்களைத் தொடர்ந்து பயிற்சி செய்வதன் மூலம் கூர்ந்து நோக்கும் திறனும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

## வடிவங்களிலிருந்து பொருள்களின் ஓவியங்களை வரைவோம் வாருங்கள்

கோடுகளில் இருந்து வடிவங்களை உருவாக்க நாம் கற்றுக்கொண்டோம். இப்போது இந்த அடிப்படை வடிவங்களைப் பயன்படுத்தி தினசரி பயன்பாட்டில் உள்ள பொருள்களின் ஓவியங்களை எவ்வாறு உருவாக்கலாம் என்பதைப் பின்வரும் செயல்பாட்டின் மூலம் பார்ப்போம்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வடிவங்களைப் பயன்படுத்தி, முடிந்தவரை பல பொருள்களின் ஓவியங்களைத் தயாரிக்கவும்.



- மாணவர்களுக்கு உண்மையான பொருள்களை காட்டி, அவற்றை உற்றுநோக்கி அவற்றின் வடிவங்களைக் கண்டறியக் கூற வேண்டும்.
- எளிய வடிவங்களைக் கொண்ட பொருள்களின் வரைபடங்களுடன் தொடங்க வேண்டும்.

CG –2
C– 2.1
LO–04AE09

**நம்மைச் சுற்றியுள்ள பொருள்களை வரைவோம்**



- உங்கள் பள்ளிப் பையில் உள்ள ஏதேனும் இரண்டு பொருட்களின் ஓவியங்களை வரைந்து வண்ணம் தீட்டுங்கள்.

பள்ளிப் பையில் இருக்கும் பொருட்களின் பட்டியலைத் தயார் செய்து, அதில் உள்ள ஏதேனும் இரண்டு அல்லது மூன்று பொருட்களின் நேரடி ஓவியத்தைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள காலி இடத்தில் வரையவும். அந்தப் பொருட்கள் எந்த அடிப்படை வடிவத்துடன் ஒத்துப்போகின்றன என்பதைக் கூறவும்.

பொருட்களின் ஓவியங்களை வரையும்போது எந்தவொரு வடிவியல் பெட்டி கருவிகளையும் பயன்படுத்த வேண்டாம்.

**பொருட்களின் வடிவங்களில் உள்ள வேறுபாடுகளைக் கண்டறிவோம் வாருங்கள்.**

- படத்தில் உள்ள பொருட்களின் பெயர்களைக் கண்டறியவும்.
- எல்லாவற்றிலும் மிகப்பெரிய பொருள் எது?
- படத்தில் ஒரே மாதிரியாகக் காணப்படும் பொருட்களின் பெயர்களைக் கூறவும்.
- எந்தப் பொருட்கள் வட்ட வடிவில் (கோள வடிவில்) காணப்படுகின்றன?
- வளி (வளையல்/வாளி) மற்றும் பெட்டிக்கு இடையே என்ன வித்தியாசம் உள்ளது?
- ஆப்பிள் மற்றும் பந்துக்கு இடையே என்ன ஒற்றுமை காணப்படுகிறது?
- மேலே உள்ள படத்தை உங்கள் நோட்டுப் புத்தகத்தில் வரையவும்.



- அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் பொருட்களை உற்றுநோக்கி ஓவியம் வரையச் சொல்ல வேண்டும்.
- வகுப்பறையில் உண்மையான பொருட்களை (பழங்கள், பாத்திரங்கள், பொம்மைகள்) வைத்து, அவற்றை உற்றுநோக்குவதன் மூலம் ஓவியம் வரையச் சொல்ல வேண்டும்.

CG –2
C– 2.1/2.2
LO–04AE10
LO–04AE11
LO–04AE12

## பொருள்களின் ஓவியங்களை வரைவோம் வாருங்கள்

இயற்கையிலிருந்து நமக்குக் கிடைக்கும் சில கூறுகளை 'இயற்கை கூறுகள்' என்றும், மனிதன் தனக்காகத் தானே தயாரித்துக் கொள்ளும் சில பொருட்களை 'மனிதனால் உருவாக்கப்பட்ட பொருட்கள்' என்றும் அழைக்கிறோம். இதை நாம் முந்தைய வகுப்பில் கற்றுக்கொண்டுள்ளோம்.

- உங்களுக்குப் பிடித்தமான இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பொருட்களை நேரடியாக உற்றுநோக்கி, அவற்றை உங்கள் நோட்டுப் புத்தகத்தில் வரையவும். (உதாரணமாக: வாளி, குவளை, டம்ளர், பந்து, மரத்தின் இலை, பூ, தேங்காய், வாழைப்பழம் போன்றவை.)



## எனது செயல்பாடு

1. வீட்டில் உள்ள ஏதேனும் இரண்டு பொருட்களை ஒரு குறிப்பிட்ட அமைப்பில் வைத்து, அவற்றை வரைந்து வண்ணம் தீட்டுங்கள்.
2. உங்களைச் சுற்றியுள்ள பகுதியில் உள்ள ஏதேனும் ஐந்து பொருட்களைத் தனித்தனியாக வரைந்து பழகுங்கள்.

- முதலில் பென்சிலால் லேசாக ஓவியத்தை வரைந்து, அதன் பிறகு வண்ணம் தீட்டும் வரிசையைப் பின்பற்ற வேண்டும்.
- மாணவர்களை வெவ்வேறு கோணங்களில் இருந்து பொருட்களைப் பார்க்கச் சொல்ல வேண்டும்.
- ஓவியத்தில் உள்ள சிறிய நுணுக்கங்களையும் கவனிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

CG –2
C– 2.1/2.2
LO–04AE10
LO–04AE12

# 4. எனது ஓவியமும் எனது கற்பனையும்

**வரைபடம்:** வரைபடம் என்பது கோடுகளின் உதவியுடன் ஒரு ஓவியத்தைத் தொடங்குவதாகும். நாம் பார்த்த நிகழ்வுகள், சம்பவங்களை நினைவுகூர்ந்து அவற்றை ஓவியமாக வரைய இந்த வரைபடம் நமக்கு உதவுகிறது. வரைபடம் வரைவதால் ஓவியத்தில் உள்ள கூறுகளின் சரியான அமைப்பு, வடிவம் மற்றும் அளவு நேர்த்தியாகப் பராமரிக்க முடிகிறது. இதனால் ஓவியத்தின் அவுட்லைன் தெளிவாகவும், புரிந்துகொள்வதற்கு எளிதாகவும் மாறுகிறது. முதலில் லேசான கோடுகளுடன் ஓவியத்தை வரைந்தால், தவறுகளைத் திருத்துவதும் எளிதாக இருக்கும்.

நினைவு ஓவியம் மற்றும் கற்பனை ஓவியம் வரைவதற்கு இந்த வரைபடப் பயிற்சி மிகவும் அவசியமாகும்.

**நினைவு ஓவியம் :** நாம் பார்த்த, கேட்ட, அனுபவித்த சம்பவங்களை நினைவுகூர்ந்து, அந்த நினைவுகளின் அடிப்படையில் வரையப்படும் ஓவியம் 'நினைவு ஓவியம்' எனப்படும்.

- உதாரணமாக: புத்தகத்தில் உள்ள கதைகளின் அடிப்படையில் வரைபடம் வரைதல்.

## நினைவிலிருந்து ஓவியம் வரைவோம் வாருங்கள்

- பள்ளிக்கு வரும்போது என்ன மரங்களைப் பார்த்தீர்கள்? இயற்கையில் என்னென்ன கூறுகளைக் கண்டீர்கள்? சுற்றியுள்ள மரங்கள் எப்படி இருந்தன? மரங்களின் மேல் என்னென்ன தெரிந்தன? அதேபோல், சுற்றியுள்ள மனிதர்களின் அசைவுகளையும் நாம் பார்த்திருக்கிறோம். இவற்றில் உள்ள முக்கியக் கூறுகளின் வரைபடப் பயிற்சியை நாம் பென்சிலின் உதவியுடன் நமது நோட்டுப் புத்தகத்தில் செய்வோம்.



- ஒவ்வொரு மாணவரின் ஓவியத்தையும் பாராட்டி அவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும்.

CG –1
C– 1.1
LO–04AE01

## நினைவிலிருந்து ஓவியம் வரைவோம்

| பிரிவு 'அ' | பிரிவு 'ஆ' | பிரிவு 'இ' |
|---|---|---|
| இயற்கை கூறுகள்<br>இலைகள், பூக்கள், பறவை, மரங்கள், ஆறு, மலை, மழை | பாரம்பரிய கூறுகள்<br>பண்டிகை, திருவிழா, பாரம்பரிய விளையாட்டுகள், கோலம், தோரணம் | நவீன கூறுகள்<br>கணினி, டி.வி., மொபைல், பூங்கா, மெட்ரோ |

மேலே உள்ள ஏதேனும் ஒரு பிரிவிலிருந்து சில கூறுகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றின் அடிப்படையில் நினைவிலிருந்து உங்கள் நோட்டுப் புத்தகத்தில் நினைவு ஓவியம் வரையவும்.

- தேர்ந்தெடுத்த கூறுகளைப் பென்சிலால் லேசாக வரைந்து கொள்ளுங்கள்.
- ஓவியத்தின் அமைப்பு காகிதத்திற்குப் பொருத்தமாக இருக்க வேண்டும். தேர்ந்தெடுத்த கூறுகளில் முடிந்தவரை அதிக நுணுக்கங்களை வரைய முயற்சி செய்து, பின்னர் அதற்கு வண்ணம் தீட்டுங்கள்.

## பார்த்த காட்சிகளின் அடிப்படையில் ஓவியம் வரைவோம் வாருங்கள்

- உங்கள் சுற்றுப்புறத்தில் நீங்கள் பார்த்த ஒரு காட்சியை நினைவுகூருங்கள். அதில் உள்ள நுணுக்கங்களை மனதில் கொண்டு வரைபடம் வரையவும்.

  வீடு அல்லது பள்ளியின் சுற்றுப்புறத்தில் நீங்கள் உங்கள் நண்பர்களுடன் பல்வேறு விளையாட்டுகளை விளையாடிக் கொண்டிருப்பது போன்ற காட்சியை நினைவுகூர்ந்து ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுங்கள்.

## சூழ்நிலையின் விவரிப்புக்கு ஏற்ப ஓவியம் வரைவோம் வாருங்கள்

- அஜய் பூங்காவிற்குச் சென்றான். அங்கு ஒரு பெரிய அடர்ந்த மரத்தின் கிளையில் ஒரு பறவை அமர்ந்து பழம் சாப்பிடுவதை அவன் கண்டான். சுற்றிலும் வண்ணமயமான பூக்கள் மலர்ந்திருந்தன. அதன் மேல் வண்ணத்துப் பூச்சிகள் மகிழ்ச்சியுடன் பறந்து கொண்டிருந்தன.

இந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப உங்கள் நோட்டுப் புத்தகத்தில் ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுங்கள்.

- மாணவர்களின் சொந்த அனுபவங்களின் அடிப்படையில் காட்சிகளை வரைய அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.
- எது சரி, எது தவறு என்ற எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் சுதந்திரமாக ஓவியம் வரைய அனுமதிக்க வேண்டும்.

CG –1
C– 1.1
LO–04AE01
LO–04AE04

## கற்பனை ஓவியம்

கண்களுக்குத் தெரிவதைத் தாண்டி, மனதிற்குள் தோன்றும் எண்ணங்களைக் காட்சி வடிவில் கொண்டு வருவதுதான் **‘கற்பனை ஓவியம்’** ஆகும். கற்பனை ஓவியங்கள் புதிய சிந்தனைகளையும், ஆக்கப்பூர்வமாக யோசிக்கும் திறனையும் வளர்க்கின்றன. மேலும், இது ஓவியக் கலையின் மீதான ஆர்வத்தையும் தன்னம்பிக்கையையும் அதிகரிக்கிறது. எனவே, கற்பனை ஓவியம் என்பது ஓவியக் கலையில் ஒரு முக்கியமான மற்றும் மகிழ்ச்சியான செயல்முறையாகும்.

கற்பனை ஓவியம் வரையும்போது புதிய மற்றும் விசித்திரமான விஷயங்களை யோசிக்க வேண்டும். உதாரணத்திற்கு, பறக்கும் சைக்கிள் அல்லது நிலவில் ஒரு பள்ளி. நமக்குத் தோன்றும் கற்பனையான யோசனைகளை கோடுகள் மற்றும் வண்ணங்களின் உதவியோடு காகிதத்தில் கற்பனை ஓவியமாக மாற்றலாம்.

## கற்பனையாக ஓவியம் வரைவோம் வாருங்கள்

உதாரணம்: ஆகாயத்தில் ஒரு வீடு, கனவு கிராமம், எனக்கு இறக்கைகள் இருந்தால்..., வண்ணமயமான மேகங்கள், போன்றவை.





- **கற்பனை செய்து ஓவியம் வரையுங்கள்.**

1. **உங்கள் கற்பனையைப் பயன்படுத்தி, இந்த உலகத்தில் இல்லாத ஒரு புதிய விசித்திரமான விலங்கின் ஓவியத்தை நோட்டுப் புத்தகத்தில் வரையவும்.**
2. **நிலவுக்குச் சுற்றுலா செல்வது போல் கற்பனை செய்து காகிதத்தில் ஓவியம் வரையவும்.**

- வகுப்பறையில் மாணவர்களின் கற்பனைத் திறனுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலான சூழலை உருவாக்க வேண்டும்.

CG- 1
C- 1.1
LO-04AE02
LO-04AE13

## எனது செயல்பாடு

1. சந்தையில் பார்த்த ஒரு சம்பவத்தின் படத்தை வரைந்து நிறம் தீட்டுங்கள்.
2. ‘பட்டம் பறக்கவிடும் குழந்தைகள்’ என்ற தலைப்பில் நினைவுச் சித்திரம் வரையுங்கள்.
3. ‘ரோபோவுடன் விளையாடும்போது’ எனக் கற்பனை செய்து படம் வரையுங்கள்.
4. ‘சாக்லேட் வீடு’ எனக் கற்பனை செய்து படம் வரையுங்கள்.
5. காற்றில் பறக்கும் வாகனங்களைக் கற்பனை செய்து படம் வரையுங்கள்.

- எந்தக் கற்பனையும் தவறல்ல என்பதை மாணவர்களுக்குச் சொல்ல வேண்டும்.
- கற்பனைப் படம் வரையும்போது தவறுகளைச் சொல்ல வேண்டாம்; கற்பனையை ஊக்குவித்து, படங்களைப் பாராட்ட வேண்டும்.

CG- 1/2
C- 1.1/2.2
LO-04AE01
LO-04AE02
LO-04AE04
LO-04AE13

# 5. முப்பரிமாணக் கலைப் படைப்பு...

சிற்பக் கலை என்பது களிமண், காகிதம், மரம் அல்லது பிற ஊடகங்களைப் பயன்படுத்தி முப்பரிமாண கலைப் படைப்புகளை உருவாக்கும் கலையாகும். சிற்பக் கலையின் மூலம் உருவாக்கப்படும் பொருள்களின் அழகை எல்லாப் பக்கங்களிலிருந்தும் பார்த்து ரசிக்க முடியும். இத்தகைய பொருள்களுக்கு நீளம், உயரம், அகலம் மற்றும் தடிமன் இருப்பதால்தான் அவை ‘முப்பரிமாணப் பொருள்’ அல்லது ’சிற்பம்’ என்று அழைக்கப்படுகின்றன.

சிற்பக் கலையில் களிமண்ணின் மூலம் நாம் விலங்குகள், பழங்கள், மலர்கள் அல்லது பல்வேறு பொருள்களை உருவாக்க முடியும். முப்பரிமாணத்தினால் பொருள்களின் வடிவம் மற்றும் அமைப்பைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கிறது. ஆகவே சிற்பக் கலையானது நமக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய மற்றும் பயனுள்ள கலையாகும்.

**கிடைக்கின்ற களிமண்ணில் இருந்து அடையாள வடிவங்களை உருவாக்குவோம்.**

1. முதல்முதலில் மென்மையான மற்றும் சுத்தமான களிமண்ணை எடுத்துக்கொள்ள வேண்டும்.
2. களிமண்ணைக் கையால் பிசைந்து அதை மென்மையாக்க வேண்டும்.
3. ஏதேனும் ஒரு எளிமையான அடையாள வடிவத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். உதா. - சூரியன், மரம், புத்தகம், மீன்.
4. களிமண்ணைச் சிறிய உருண்டையாக்கி அதைக் கை அல்லது கருவியால் வடிவமைக்க வேண்டும்.
5. தேர்ந்தெடுத்த வடிவத்திற்கு ஏற்ப களிமண்ணை அழுத்தியோ அல்லது வளைத்தோ சரியான வடிவத்தை உருவாக்க வேண்டும்.
6. உருவாக்கப்பட்ட வடிவத்தின் மீது விரல்களால் அல்லது குச்சியால் சிறிய நுணுக்கங்களை உருவாக்கி காட்ட வேண்டும்.
7. உருவாக்கப்பட்ட வடிவத்தை மெதுவாக ஒரு தட்டையான மேற்பரப்பின் மீது உலர வைக்க வேண்டும்.
8. களிமண் வடிவம் உலர்ந்த பிறகு அதன் மீது வண்ணம் தீட்டி அதை மேலும் அழகாக மாற்ற வேண்டும்.

இந்தச் செயல்பாட்டினால் படைப்பாற்றல், கற்பனைத் திறன் மற்றும் கைவினைத்திறன் ஆகியவை வளர்ச்சி அடைகின்றன.






- மாணவர்களின் கைவினைத் திறனை ஊக்குவிக்க வேண்டும்.
- எளிமையான வடிவங்களில் இருந்து தொடங்கி பொருள்களை உருவாக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

CG –3
C– 3.2
LO–04AE17
LO–04AE18

## இயற்கை கூறுகளின் கலைநயமிக்க சிறப்புகள்-

ஓர் ஓவியம் அல்லது சிற்பத்தை உருவாக்குவதற்கு முன்பு, நாம் நம்மைச் சுற்றியுள்ள இயற்கை மற்றும் இயற்பியல் கூறுகளை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். உற்றுநோக்குவதன் மூலம் பல்வேறு இயற்கை கூறுகளின் கலைநயமிக்க சிறப்புகளைப் புரிந்துகொள்வது அவசியம். எ.கா. நீரின் அலைகள்- சீரான அலை இயக்கம் கொண்டவை, மரங்கள்- அடர்த்தியான கிளைகளுடன் படர்ந்திருப்பவை, அசோக மரம்-கூம்பு வடிவில் கீழிருந்து மேல் நோக்கி குறுகலானது, சூரியன்- கதிர்வீச்சு மற்றும் பிரகாசம் மிக்கது. இதேபோல் இயற்கையின் பிற கூறுகளின் சிறப்புகளைப் பற்றி வகுப்பில் விவாதிக்கவும்.

## கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு மாதிரிகளை உருவாக்குவோம்.

ஒரு சிறிய கிராமம், தோட்டம் அல்லது வீடு ஆகியவற்றில் ஏதேனும் ஒரு மாதிரியை உருவாக்குவோம். (மரங்களின் இலைகள் மற்றும் கிளைகள், வீடுகள் செய்வதற்கு காலியான அட்டைப் பெட்டிகள், சாலை அல்லது அலங்காரத்திற்காக கற்கள் மற்றும் மணல் ஆகியவற்றை பயன்படுத்தலாம்)








- மாணவர்களுக்குக் கைகளால் வேலை செய்யும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.
- பாதுகாப்பை உறுதிசெய்து, உபகரணங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்று விளக்கிச் சொல்ல வேண்டும்.
- இயற்கையின் கூறுகளைக் கவனித்து, தாங்கள் பார்த்த இயற்கை கூறுகளின் கலைநயமிக்க சிறப்புகளைப் பற்றி விவாதிக்க மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

CG -3
C- 3.2
LO-04AE17
LO-04AE18
LO-04AE19

## முப்பரிமாணக் கலைப் படைப்புகளின் உலகில்

நம் சுற்றுப்புறத்தில் சுற்றிலும் பல்வேறு வகையான முப்பரிமாண அமைப்புகளை நாம் பார்த்துக்கொண்டே இருக்கிறோம்.

- அன்றாடப் பயன்பாட்டில் உள்ள சிறிய வடிவத்திலான பொருள்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட முப்பரிமாண அமைப்புகளைப் பாருங்கள், அவற்றின் பட்டியலை உருவாக்குங்கள்.





**உங்கள் சுற்றுப்புறத்தில் அல்லது வீட்டில் பார்த்த ஏதேனும் நான்கு முப்பரிமாண அமைப்புகளின் பெயர்களைக் கூறுங்கள், அந்தப் பொருள்களை விவரியுங்கள்.**

1. .........................................  2. .........................................

3. .........................................  4. .........................................

## இயற்கைப் பொருள்களிலிருந்து கலைப் படைப்பு

சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருள்கள் என்பவை இயற்கைக்குத் தீங்கு விளைவிக்காத கூறுகள் மற்றும் பொருள்கள் ஆகும்.

- இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்தி ஒரு படைப்பை உருவாக்குவோம். எ.கா: இலைகள், மலர்கள், விதைகள், மரத்தின் உலர்ந்த கிளைகள், வண்ண கோலம், கல், களிமண் முதலியன.







மேலே உள்ளவாறு உங்கள் சுற்றுப்புறத்தில் கிடைக்கின்ற பொருள்களைப் பயன்படுத்தி வெவ்வேறான கலைப் படைப்புகளை உருவாக்குங்கள்.

- முப்பரிமாண வடிவம் என்ற கருத்தை நேரடியான பொருளைக் காட்டித் தெளிவாக விளக்க வேண்டும்.
- மாணவர்களை ஊக்குவிப்பதற்காக அவர்கள் உருவாக்கிய பொருள்களின் கண்காட்சியை ஏற்பாடு செய்ய வேண்டும்.

CG –3
C– 3.2
LO–04AE17

**வாருங்கள், ஒரு முப்பரிமாண எழுத்து உருவாக்குவோம்.**

- களிமண்ணிலிருந்து உங்கள் சொந்தப் பெயரின் முதல் எழுத்தை உருவாக்குங்கள்.





## எனது செயல்பாடு

1. இயற்கைக் கூறுகளைப் பயன்படுத்தி ரங்கோலி வரையுங்கள்.
2. சுற்றுப்புறத்தில் கிடைக்கின்ற களிமண்ணைப் பயன்படுத்தி உங்கள் விருப்பப்படி அணிகலன்களைஉருவாக்குங்கள்.
3. சுற்றுப்புறத்தில் உள்ள சுற்றுச்சூழலுக்கு உகந்த கூறுகளைப் பயன்படுத்தி ஒரு அழகான முப்பரிமாண வடிவத்தை உருவாக்குங்கள்.
4. களிமண்ணிலிருந்து போக்குவரத்து விதிகளின் சின்னங்களை உருவாக்குங்கள்.
5. களிமண்ணிலிருந்து ஏதேனும் ஒரு விலங்கு அல்லது பறவையை உருவாக்குங்கள்.

- நேரடியாகச் சேகரிக்கப்பட்ட பொருள்களின் மாதிரிகளைக் காட்ட வேண்டும். மாணவர்களின் கற்பனைகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். எளிமையான பொருள்களிலிருந்து தொடங்க வேண்டும். சுத்தம் மற்றும் பாதுகாப்பு குறித்துக் கவனம் செலுத்த வேண்டும்.

CG –3
C–3.2
LO–04AE18



# நாடகம்

# 6. வாருங்கள் நடித்துப் பார்ப்போம்

நம்மைச் சுற்றியுள்ள பல சத்தங்களை நாம் கேட்கிறோம். நீங்கள் யார் யாருடைய குரல்களைக் கேட்டிருக்கிறீர்கள்? விலங்குகள், பறவைகள், மனிதர்களின் குரல்களை நாம் கேட்டிருக்கிறோம். அவற்றில் சில மனிதர்களின் குரல்களை இந்த ஒலிப்பதிவின் மூலம் கேளுங்கள். நீங்கள் சிறிது நேரம் கண்களை மூடிக்கொள்ளுங்கள்.

''வெங்காயம்-உருளைக்கிழங்கு-கொத்தமல்லி...
இதோ புதிய வெந்தயக்கீரை வாங்குங்கள்..''

''பழைய பேப்பர்... பழைய இரும்பு வாங்குபவர்...
பழைய இரும்பு, பித்தளை வாங்குபவர்...''

''டிங்-டிங்-டிங்-டிங்... குல்ஃபி வாங்குங்கள் குல்ஃபி...
குளிர்ந்த, மலாய் குல்ஃபி...''

''குழந்தைகளே, கண்களைத் திறந்து சொல்லுங்கள்,
உங்கள் பகுதியில் இதுபோன்ற சத்தங்கள் எப்போது வரும்?
இந்தச் சத்தங்கள் யாருடையதாக இருக்கும்?''

மிகச் சரி, தொழில் செய்பவர்களின் குரல்கள் தான் இவை.

### இப்போது கொஞ்சம் யோசிப்போம்.

1. காய்கறி விற்பவர் எப்படிச் சத்தம் போடுவார்?
2. பழைய பேப்பர் வாங்குபவர் எப்படிச் சத்தம் போடுவார்?
3. குல்ஃபி விற்பவரின் குரலுடன் மணியோசையும் கேட்கிறதா?

ஒவ்வொரு தொழில் செய்பவரின் குரலும், பேசும் முறையும் வெவ்வேறானவை. அவர்கள் சத்தம் போடும் முறையும் வித்தியாசமாக இருக்கும். அவர்களின் குரலை வைத்தே நாம் அவர்களைத் தூரத்திலிருந்தும் அடையாளம் கண்டு கொள்கிறோம்.

### வாருங்கள், பாவனை செய்வோம்!

ஒரு தொழில் செய்பவரைப் போல நாம் பாவனை செய்யும்போது, அவருடைய தொழில், ஆடை மற்றும் குரல் ஆகியவற்றை நாம் கவனிக்க வேண்டும். காய்கறி விற்பவரைப் போல பாவனை செய்யும்போது, காய்கறி விற்பவர் தலையில் 'கூடை' வைத்துக்கொண்டு, ''காய்கறி.. புதிய புதிய காய்கறி வாங்குங்கள்..!'' என்று கூச்சலிடுவதை நாம் அறிவோம். எனவே, நாம் பாவனை செய்யும்போது, காய்கறி விற்பவர் தலையில் கூடையை எப்படிப் பிடிக்கிறார் என்பதைப் போலச் செய்து காட்டி, ''காய்கறி.. புதிய புதிய காய்கறி..!'' என்று குரல் எழுப்ப வேண்டும்.

சரி, வாருங்கள், நாம் முதலில் காய்கறி விற்பவரைப் போல பாவனை செய்வோம்.

அருமை. எல்லாரும் மிகச் சிறப்பாகப் பாவனை செய்தீர்கள்.

- மாணவர்களுக்கு அதே போன்ற குரல்களை எழுப்பி பாவனை செய்வதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும்.
- ஒவ்வொரு மாணவரின் பங்களிப்பையும் ஏற்று, அவர்களின் சுய அவதானிப்பு மற்றும் பாவனையைப் பாராட்ட வேண்டும்.
- முதல் பக்கத்தில் உள்ள கியூ.ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்து, ஆடியோ- வீடியோ ஊடகம் மூலம் விளக்கத்தைக் காட்ட வேண்டும்.

CG – 1
C – 1.2
LO–04AE23

**இப்போது நீங்கள் கீழே உள்ள தொழில் செய்பவர்களைப் போல பாவனை செய்து பாருங்கள்.**








**அருகில் உள்ள படத்தில் உள்ள நபர்களின் குரல்களைப் போலப் பாவனை செய்யுங்கள்.**





பல்வேறு தொழில் செய்பவர்களின் குரல்களில் உள்ள ஏற்ற இறக்கங்களைப் பயிற்சி செய்து வகுப்பறைக்கு முன்னால் நடித்துக் காட்டுங்கள். அனைவரது நடிப்பிலும் இன்னும் என்ன செய்திருந்தால் நடிப்பு நன்றாக இருந்திருக்கும் என்பதைப் பற்றி விவாதித்து, மீண்டும் நடித்துக் காட்டுங்கள்.

**யாருடைய குரல் இது ?**

**வாருங்கள், இந்த விளையாட்டை விளையாடுவோம் !**

ஒரு மாணவன் அல்லது மாணவி கண்களை மூடிக்கொண்டு நிற்க வேண்டும். அவருக்குப் பின்னால் மற்றொரு நண்பனையோ அல்லது தோழியையோ நிற்க வைக்க வேண்டும். பின்னால் நிற்கும் நண்பர் அல்லது தோழி தங்கள் பகுதியில் உள்ள ஏதேனும் ஒரு தொழில் செய்பவரின் குரலை மட்டும் எழுப்ப வேண்டும். முன்னால் நிற்கும் நண்பர் அல்லது தோழி, அது யாருடைய குரல் மற்றும் அந்த குரலை எழுப்பும் வகுப்பறை நண்பர் யார் என்பதை அடையாளம் காண வேண்டும். குரலை அடையாளம் காண முடியாத நண்பர் அல்லது தோழிக்கு மீண்டும் இரண்டு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். அப்படியும் அடையாளம் காண முடியவில்லை என்றால், அவர் ஆசிரியர்கள் கூறும் ஏதேனும் ஒரு பாவனையைச் செய்து காட்ட வேண்டும்.

- மாணவர்களின் நடிப்பைப் பாராட்டி அவர்களின் தன்னம்பிக்கையை ஊக்குவிக்க வேண்டும். அவர்களின் குரலில் ஏற்ற இறக்கங்கள் எவ்வாறு மாறுகின்றன என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

CG – 1/2
C – 2.1/1.2
LO–04AE24/28

## உற்றுநோக்கலின் அடிப்படையில் விவரிப்போம்

நம் வீட்டில் உள்ளவர்களின் குரல் அல்லது அவர்களின் உடல் அசைவுகளைக் கொண்டே அவர்கள் கோபமாக இருக்கிறார்களா அல்லது மகிழ்ச்சியாக இருக்கிறார்களா என்பதை நம்மால் அடையாளம் காண முடிகிறது, அல்லவா? விலங்குகள் அல்லது பறவைகள் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா அல்லது கோபமாக இருக்கிறார்களா என்பதைப் புரிந்துகொள்ள நாம் அப்படிப்பட்ட ஒரு உலகத்திற்குச் செல்லவிருக்கிறோம், எங்கு மனிதர்கள் இல்லை மாறாக விலங்குகள் பேசுகின்றன! விலங்குகள் பேசுவதில்லை! முற்றிலும் உண்மை. இருப்பினும் அவர்களின் உடல் அசைவுகள் மற்றும் குரல்களைக் கொண்டு அவர்கள் கோபமாக இருக்கிறார்களா அல்லது மகிழ்ச்சியாக இருக்கிறார்களா என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

**இப்போது கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களைப் பாருங்கள்!**



படங்களைப் பார்த்து, படங்களில் உள்ள சூழ்நிலைகளைப் பற்றி சிந்தித்து, பேசாமல் வெறும் உடல் அசைவுகள் மற்றும் முகபாவனைகள் மூலம் அந்த சூழ்நிலையை நடித்துக் காட்டுங்கள். இந்த வகை நடிப்புக்கு 'மௌன நடிப்பு' என்று பெயர்.

## செய்து பார்ப்போம்!

1. மௌன நடிப்பிற்காக இரண்டு அல்லது மூன்று விலங்குகள் அல்லது பறவைகளின் வீடியோக்களைப் பார்த்து, அவற்றின் உடல் அசைவுகளைப் பயிற்சி செய்யுங்கள்.
2. கீழே உள்ள குறிப்புகளின் அடிப்படையில் பள்ளிக்குத் தயாராகும் சூழ்நிலையை மௌன நடிப்பு மூலம் காட்டவும்:

- பையில் நோட்டுப் புத்தகங்களை அடுக்குதல். -தலைமுடி வாருதல். -மதிய உணவுப் பெட்டியை எடுத்தல். -தண்ணீர்ப் பாட்டிலை நிரப்புதல். -காலில் காலணி அல்லது ஷூ அணிந்து பள்ளிக்குக் கிளம்புதல்.

- பல்வேறு விலங்குகள் மற்றும் பறவைகளின் உடல் அசைவுகளைப் பாவனை செய்வதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும். இத்தகைய அசைவுகளை மௌன நடிப்பு மூலம் செய்து காட்டச் சொல்ல வேண்டும்.
- மௌன சைகை விளையாட்டுகள் போன்ற பல்வேறு விளையாட்டுகள், பட வாசிப்பு அல்லது குடும்பச் சூழ்நிலைகள் மூலம் மௌன நடிப்பைச் செய்ய வைக்க வேண்டும்.

CG –1
C – 1.1
LO–04AE22

**வாருங்கள், இந்த விளையாட்டை விளையாடுவோம்!**

**நான் உனது கண்ணாடி**

இரண்டு இரண்டு பேராக ஜோடிகளை அமைத்துக் கொள்ளுங்கள். ஒருவர் 'நடிகர்' ஆகவும், மற்றொருவர் 'கண்ணாடி' ஆகவும் இருக்க வேண்டும். நடிகர் ஏதேனும் ஒரு செயலைச் செய்வார். 'கண்ணாடி'யாக இருக்கும் நண்பர் அல்லது தோழி, அதே செயலை, அதே முகபாவனைகளுடன் ஒரே நேரத்தில் அப்படியே பாவனை செய்து காட்ட வேண்டும்.

**கீழே உள்ள படங்களைப் பாருங்கள். படங்களை உற்றுநோக்கிப் பாத்திரங்களைத் தேர்ந்தெடுங்கள். காகித முகமூடிகளைப் பயன்படுத்தி, உரையாடல்களுடன் குழுவாக நடித்துக் காட்டுங்கள்.**

**காட்டு நண்பர்களின் சுற்றுலா**

**(பாத்திரங்கள் - மரம், மயில், யானை, முயல், காற்று, மழை, மலை, சூரியன்)**





**மலை:** நான் நகராமல் பல வருடங்களாக இங்கே நின்று கொண்டிருக்கிறேன்.

**சூரியன்:** நான் சூரியன். நான் உதித்ததும் எல்லா இடங்களிலும் ஒளி பரவுகிறது.





**மரம்:** நான் ஒரு பெரிய மரம். நான் அனைவருக்கும் நிழல் தருகிறேன்.

**யானை:** வழியில் வரும் கற்கள் மற்றும் கிளைகளை என் தும்பிக்கையால் பக்கவாட்டில் ஒதுக்கி அனைவருக்கும் உதவுகிறேன்.

**மயில்:** நான் எனது அழகான தோகையை விரித்து நடனமாடி, காட்டின் அழகைக் கூட்டுகிறேன்.

**முயல்:** நான் வேகமாக ஓடுவேன். எனக்கு கேரட் சாப்பிடப் பிடிக்கும்!

**காற்று:** நான் குளிர்ந்த தென்றலைக் கொண்டு வருகிறேன். அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறேன்.

**மழை:** நான் தண்ணீரைக் கொடுக்கிறேன். அதனால் காடு பசுமையாக இருக்கிறது.

**காடு:** காடு நம்முடையது, நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் நண்பர்கள்.

- பல்வேறு சூழ்நிலைகளுக்கான உரையாடல்களைத் தயாரித்து, முகமூடிகளுடன் குழுவாக நடித்துக் காட்டுவதற்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும்.
- விலங்குகள் மற்றும் பறவைகளைப் போல நடித்துக் காட்டுவதற்கு, வெவ்வேறு முகமூடிகளை உருவாக்க மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்.
- விலங்குகள் மற்றும் பறவைகளின் குரல்களையும் உடல் அசைவுகளையும் அப்படியே பாவனை செய்வதற்கு வழிகாட்ட வேண்டும்.

CG -3/4
C - 3.1/4.1
LO-04AE31/32/37

பிறந்தநாளுக்குக் கிடைக்கும் காகித முகமூடிகளை இதற்காகப் பயன்படுத்தலாம். தேவைக்கேற்ப காகிதம் அல்லது அட்டை காகிதத்தை கொண்டு முகமூடிகளைத் தயாரிக்கவும்.

விலங்குகள், பறவைகள் சார்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளை முகமூடிகளைப் பயன்படுத்தி நடித்துக் காட்டுங்கள்.

## எனது செயல்பாடு

- பாடப்புத்தகத்தில் உள்ள ஏதேனும் ஒரு தலைப்பில் உரையாடலைத் தயாரித்து, பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து, முகமூடிகள் மற்றும் ஆடை அலங்காரத்தின் உதவியோடு குழுவாக நடித்துக் காட்டுங்கள்.
- உங்கள் பகுதியில் உள்ள தொழில் செய்பவர்களை உற்றுநோக்கிப் பாவனை நடிப்பு செய்து காட்டுங்கள் செய்யுங்கள்.
- தொழில் செய்பவர்கள் தொடர்பான சூழ்நிலைகளைத் தேர்ந்தெடுத்து, மௌன நடிப்பு மூலம் நடித்துக் காட்டுங்கள்.

# 7. நாடகத்திற்குத் தயாராவோம்!

இதுவரை நீங்கள் பலமுறை கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருப்பீர்கள், அல்லவா? நாம் வகுப்பிலும் விலங்குகள், பறவைகள், குடும்ப உறுப்பினர்களின் குரல் மற்றும் அசைவுகளைப் போலச் செய்தல் மற்றும் ஊமை நாடகம் ஆகியவற்றைச் செய்துள்ளோம். இப்போது நாம் ஒரு குறிப்பிட்ட நிகழ்வை நடிக்கப் போகிறோம். நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?

## நடிப்பின் படிகள்

ஆமாம், ஆனால் அதற்கு முன் நிகழ்வை நடிப்பதற்கான தயாரிப்புகளைச் செய்ய வேண்டும். நாம் வீட்டிலோ அல்லது பள்ளியிலோ ஒரு நிகழ்ச்சியைக் கொண்டாடப் போகிறோம் என்றால், அப்போது வீட்டில் உள்ள அனைவரும் ஒன்றாக அமர்ந்து: அந்த நிகழ்ச்சிக்கு என்னென்ன பொருட்கள் தேவைப்படும்? என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டும்? அதில் யார் யார் என்ன வேலை செய்ய வேண்டும்? நிகழ்ச்சிக்கு என்ன ஆடைகளை அணிய வேண்டும்? என்பது போன்ற பல விஷயங்களைத் திட்டமிடுகிறோம், அதன் பிறகுதான் உண்மையான நிகழ்ச்சித் தயாரிப்பைத் தொடங்குகிறோம். திட்டமிட்டபடி எல்லாம் நடந்தால், அந்த நிகழ்ச்சியும் சிறப்பாகக் கொண்டாடப்படும். இந்த நிகழ்ச்சி ஒரு பிறந்தநாளாகவோ அல்லது திருமணமாகவோ இருந்தாலும், திட்டமிடலும் தயாரிப்பும் கண்டிப்பாகச் செய்யப்பட வேண்டும்.




அதேபோல நாம் நாடகத்தின் மூலம் ஒரு நிகழ்வை நடிக்க விரும்பினால், அதற்கு முதலில் அந்த நிகழ்வைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நிகழ்வின் கருத்தைக் கருத்தில் கொண்டு கதாபாத்திரங்களை முடிவு செய்ய வேண்டும். எந்தக் கதாபாத்திரத்தை யார் செய்யப் போகிறார்கள் என்பதையும் தீர்மானிக்க வேண்டும். கதாபாத்திரத்திற்குப் பொருத்தமான ஆடைகள், நிகழ்வுக்குத் தேவையான பொருட்களைச் சேகரிப்பதும் தயாரிப்பின் ஒரு பகுதியாகும்.

இதனுடன் வசனங்களை மனப்பாடம் செய்து பயிற்சி செய்வதும் மிகவும் அவசியமாகும். போதுமான பயிற்சிக்குப் பிறகு நாம் நேரடியாக மேடையில் நடிக்க முடியும்.

இந்தத் திட்டமிடல் மற்றும் முன் தயாரிப்புகள் அனைத்தும் நிகழ்வை நடிப்பதன் படிகளே ஆகும். கொடுக்கப்பட்டுள்ள படத்திலிருந்து இதை நீங்கள் இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ளலாம்.

சரி, இதற்காக நாம் ஒரு நிகழ்வைத் தேர்ந்தெடுத்து, நிகழ்வை நடிப்பதற்கான அனைத்துப் படிகளையும் பயன்படுத்தி நடிப்போம்.

- நிகழ்வை நடிப்பதற்கான பல்வேறு படிகளை விளக்குக.

CG –2/3
C – 2.1/3.1
LO–04AE25/30

நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நாம் பலவகையான மனிதர்களுடன் தொடர்பு கொள்கிறோம். சந்தைக்குச் செல்லும்போது காய்கறி விற்பனை செய்பவருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே உரையாடல் நடக்கிறது. இந்த உரையாடலின் மூலம் பொருட்களின் விலையைக் கேட்பது, பேரம் பேசுவது, வணிகம் செய்வது மற்றும் பணிவாகப் பேசுவது போன்றவற்றை நாம் கற்றுக் கொள்கிறோம். இன்று நாம் காய்கறி விற்பனை செய்பவருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

**சூழல்: காய்கறி சந்தை (காய்கறி விற்பனை செய்யும் பெண் பலவிதமான காய்கறிகளுடன் அமர்ந்திருக்கிறார்).**

(கதாபாத்திரங்கள்: காய்கறி விற்பனை செய்பவர் மற்றும் வாடிக்கையாளர்)

**வாடிக்கையாளர்:** ஓ பெரிய அம்மா, கத்தரிக்காய் என்ன விலை?

**காய்கறி விற்பவர்:** ரொம்பப் புதிய கத்தரிக்காய் பாருங்க! கால் கிலோ 30 ரூபாய். வாங்கிக்கோங்க, காலையில்தான் பறிச்சிட்டு வந்தேன்.

**வாடிக்கையாளர்:** அடப்பாவமே! நேற்றைக்குத்தானே 20 ரூபாய்க்கு இருந்தது. இன்னைக்கு என்ன திடீர்னு இவ்வளவு அதிகமாகிடுச்சு? கொஞ்சம் விலையைக் குறைச்சுப் போடுங்கம்மா?

**காய்கறி விற்பவர்:** அதெப்படி தம்பி, மழையைப் பாருங்க எவ்வளவு பெய்யுதுன்னு. வயலில் இருந்து கத்தரிக்காய் பறிக்க முடியல, அதனால்தான் கொஞ்சம் விலை ஏறிடுச்சு.

**வாடிக்கையாளர்:** அது சரிதான், ஆனா நான் எப்பவும் உங்ககிட்டதானே வாங்குறேன். எனக்கு 50 ரூபாய்க்கு அரை கிலோ கொடுங்க, கூடவே 10 ரூபாய்க்கு கொத்தமல்லியும் கொடுங்கப்பா.

**காய்கறி விற்பவர்:** (சிரித்துக்கொண்டே) அதெப்படி தம்பி, 60 ரூபாய்க்கு விற்றால் எனக்கு முதலுக்கே வராது! சரி, உங்க பேச்சும் இருக்கட்டும் என் பேச்சும் இருக்கட்டும், கொத்தமல்லி ஒரு கட்டு 15 ரூபாய்க்கும், கத்தரிக்காய் 55 ரூபாய்க்கும் போடுறேன். மொத்தம் 70 ரூபாய் கொடுங்க.

**வாடிக்கையாளர்:** சரி, இந்தாங்க 70 ரூபாய். சரி, இந்த வெண்டைக்காய் என்ன விலை?

**காய்கறி விற்பவர்:** வெண்டைக்காய் கிலோ 60 ரூபாய். வெண்டைக்காய் நல்லா பிஞ்சா இருக்கு, வேணுமானால் விரல்களால் கிள்ளிப் பாத்துக்கோங்க.

**வாடிக்கையாளர்:** அரைகிலோ வெண்டைக்காய் கொடுங்க. அப்புறம், பச்சமிளகாயும் கறிவேப்பிலையும் போட மறந்துடாதீங்க!

**காய்கறி விற்பவர்:** கண்டிப்பா, கண்டிப்பா! நீங்க கேக்குறதுக்கு முன்னாடியே நான் பையில மிளகாயும் கறிவேப்பிலையும் போட்டுட்டேன். இந்தாங்க உங்க காய்கறி.

**வாடிக்கையாளர்:** நன்றி பெரிய அம்மா. நான் கிளம்புறேன்.

**காய்கறி விற்பவர்:** சரி தம்பி, மீண்டும் கண்டிப்பா வாங்க!

- நாடக நடிப்பிற்காகத் தேர்ந்தெடுத்த சூழலின் வசனங்களை வாசித்துப் பழகவும்.

CG -1
C -1.2
LO-04AE23

**பாத்திரங்கள் மற்றும் பாத்திரத் தேர்வு -**

இப்போது நாம் ஒரு நிகழ்வை மேடையேற்ற வேண்டும் என்றால், முதலில் அந்த நிகழ்வில் எத்தனை பாத்திரங்கள் உள்ளன என்பதைப் பார்க்க வேண்டும். இந்த நிகழ்வில், காய்கறி விற்பவர் மற்றும் வாடிக்கையாளர் ஆகிய இரு முக்கிய பாத்திரங்கள் உள்ளனர். இப்பாத்திரங்களை முடிவு செய்யும்போது, காய்கறி விற்பவர் ஒரு முதிய பெண்மணி ஆவார். வாடிக்கையாளர் நடுத்தர வயதுடைய ஒரு ஆண் ஆவார். இவர்களின் உரையாடலின் மூலம் இது நமக்குத் தெரியவரும். அதாவது ஒரு சிறுமி மற்றும் ஒரு சிறுவன் என இரு மாணவர்களை இந்த இரு பாத்திரங்களுக்கும் தேர்வு செய்ய வேண்டும். சரி, இப்போது சொல்லுங்கள், உங்களில் யார் காய்கறி விற்கும் மாமியாகவும், யார் வாடிக்கையாளராகவும் இருக்கப் போகிறீர்கள் என்பதை முடிவு செய்து, உங்கள் உரையாடல்களை மனப்பாடம் செய்யத் தொடங்குங்கள். அதற்குள் நாம் அடுத்த கட்டத் தயாரிப்புகளைச் செய்வோம்.

இந்த பாத்திரங்கள் தங்களின் உரையாடல்களை நன்றாக மனப்பாடம் செய்வது அவசியமாகும். அப்போதுதான் அவர்களால் மிகவும் இயல்பாக உரையாடல்களைப் பேச முடியும்.

**ஆடை வடிவமைப்பு -**

இப்போது பாத்திரங்கள் முடிவு செய்யப்பட்ட பிறகு, அவர்களின் வயது மற்றும் பாத்திரத்தை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். காய்கறி விற்பவர், வாடிக்கையாளரை விட வயதில் மூத்த பெண்ணாக இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். காய்கறி விற்கும் பெண்மணி சாதாரண சேலை அல்லது ஒன்பது கஜ சேலை அணிந்திருக்க வேண்டும். நெற்றியில் பெரிய குங்குமம், இடுப்பில் பணப்பை அல்லது துணிப்பை, மற்றும் முன்னால் காய்கறிக்கூடைகள் இருக்க வேண்டும்.

வாடிக்கையாளர் நடுத்தர வயதுடைய ஒரு ஆணாக இருக்க வேண்டும், சட்டை மற்றும் கால்சட்டை (பேண்ட்) அணிந்திருக்க வேண்டும், கையில் சந்தைக்குச் செல்வதற்கான ஒரு பை இருக்க வேண்டும். இத்தகைய சூழலுக்கு ஏற்ற ஆடைகளை நாம் முடிவு செய்ய வேண்டும். இதனையே நாடக மொழியில் 'ஆடை வடிவமைப்பு' என்பர்.

**அரங்க ஒப்பனை -**

நிகழ்வை மேடையேற்றும்போது அது மிகவும் உண்மையாகத் தோன்றுவதற்கு, ஆடைவடிவமைப்புடன் அரங்க ஒப்பனையும் மிகவும் முக்கியமானது. உதாரணமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட காய்கறி விற்கும் பெண்மணியின் பாத்திரம் சற்று வயதானது என்பதால், அதற்கு ஏற்ப தலைமுடி சற்று நரைத்தது போன்ற தோற்றத்தை உருவாக்க வேண்டும். இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும், பாத்திரத்தின் தன்மைக்கு ஏற்ப அவர்களுக்கு ஒப்பனை செய்வதே 'அரங்க ஒப்பனை' ஆகும்.

இதுவரை நமது பாடத்தின்படி, ஆடை வடிவமைப்புக்கு ஆடைகளும், அரங்க ஒப்பனைக்குச் சில பொருட்களும் தேவைப்படும் என்பதை நாம் அறிந்து கொண்டோம். சரி, இப்போது நாம் இந்த நிகழ்விற்கான பொருட்களைத் தேர்ந்தெடுத்துச் சேகரிப்போம்.

- நிகழ்விற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சூழலுக்கு ஏற்ப பாத்திரத் தேர்வை விவாதிக்க வேண்டும்.
- சூழ்நிலைக்கு ஏற்ற ஆடை வடிவமைப்பு மற்றும் அரங்க ஒப்பனை எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதை விவாதிக்க வேண்டும்.
- சூழ்நிலைக்கு ஏற்ற ஆடை வடிவமைப்பு மற்றும் அரங்க ஒப்பனைத் தேர்வைச் செய்து காட்ட வேண்டும்.

CG -3
C -3.1/3.2
LO-04AE31/34

## பொருட்களைத் தேர்ந்தெடுப்போம் -

இப்போது காய்கறி விற்பவர் மற்றும் வாடிக்கையாளர் நிகழ்வை மேடையேற்றுவதற்கு நமக்கு என்னென்ன பொருட்கள் தேவைப்படும்? மிகச் சரி.

தராசு, காய்கறிகள், சிறிய கூடைகள், பை, பணம், பணப்பை, சேலை போன்றவை. மிகச் சிறந்த பட்டியலைத் தயாரித்துள்ளீர்கள்.

சரி, அப்படியானால் இந்த பொருட்களைச் சேகரிக்கத் தொடங்குங்கள்.

### பின்வரும் பொருட்களை நாடக நிகழ்விற்கு ஏற்ப பயன்படுத்துவோம்.



**மேலே உள்ள பொருட்களைக் கவனித்து, பின்வரும் நிகழ்வுகளுக்கு ஏற்ப வகைப்படுத்தி நோட்டுப் புத்தகத்தில் எழுதுங்கள்.**

| 1. மருத்துவமனை நிகழ்வு | 2. சமையலறை நிகழ்வு | 3. வகுப்பறை நிகழ்வு |
|---|---|---|
| .............................. | .............................. | .............................. |
| .............................. | .............................. | .............................. |
| .............................. | .............................. | .............................. |
| .............................. | .............................. | .............................. |

- நிகழ்வை மேடையேற்றுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சூழலுக்கு ஏற்ப, தேவையான பொருட்களின் பட்டியலைத் தயாரிக்கச் சொல்ல வேண்டும்.
- பொருட்களைத் தேர்ந்தெடுக்கும்போது அவை இயற்கையான அல்லது சுற்றுச்சூழல் சார்ந்தவையாக இருக்க வேண்டும் என்ற தகவலை அளிக்க வேண்டும்.

CG –2/4
C – 2.1/4.1
LO–04AE25/36

**மாற்றுப் பொருட்களின் பயன்பாடு –**

இப்போது பாருங்கள், நாம் ஓரளவிற்கு எல்லாத் தயாரிப்புகளையும் செய்துவிட்டோம். ஆனால், நமது நிகழ்வை மேடையேற்றுவதற்குக் காய்கறிகள், தராசு, பை, நிஜப் பணம் ஆகியவற்றைக் கொண்டு வருவது எப்போதும் சாத்தியமா? இல்லைதானே? அப்படியானால், அதற்கான மாற்று வழிகளை நாம் ஆராய்வோம் வாருங்கள்.

இப்போது காய்கறி விற்கும் மாமியிடம் விதவிதமான காய்கறிகள் இருப்பதை எப்படிக் காண்பிக்கலாம் என்று சிந்தித்துப் பாருங்கள்.

காய்கறிகளுக்குப் பதிலாக நமது சுற்றுப்புறத்தில் உள்ள மரங்களின் வண்ணமயமான இலைகள், பூக்கள், காய்கள், புற்கள் ஆகியவற்றைக் காய்கறிகளாகப் பயன்படுத்தலாம். சில்லறை நாணயங்களுக்குப் பதிலாகச் தட்டையான சிறிய கற்களையும், ரூபாய் நோட்டுகளுக்குப் பதிலாகக் காகிதத் துண்டுகளையும் பயன்படுத்தலாம். பார்த்தீர்களா, பொருட்கள் தயாராகிவிட்டன அல்லவா? எவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது! நாம் சொப்பு வைத்து விளையாடும்போதும் (விளையாட்டுச் சமையல்) இதேபோலத்தானே பொருட்களைச் சேகரிப்போம், இல்லையா!

**பொருட்களை உருவாக்குதல் –**

அடடா, சுற்றுப்புறத்திலேயே பல பொருட்கள் கிடைத்துவிட்டன. இன்னும் சிலவற்றை மாற்றுப் பொருட்களாகப் பயன்படுத்த முடிவு செய்துள்ளோம். ஆனால், தராசுக்கு மாற்றாக என்ன பொருளைப் பயன்படுத்துவது என்று தோன்றவில்லையா?

சரி, அப்படியானால் நாமே ஒரு தராசைத் தயாரிப்போம் வாருங்கள்.

இது மிகவும் எளிது. நீங்கள் சந்தையில் தராசைப் பார்த்திருப்பீர்கள். அதன் இரு பக்கங்களிலும் இரண்டு தட்டுகள் (தராசுத் தட்டுகள்) இருக்கும். அவற்றைச் சமமாகத் தாங்கிப் பிடிக்க ஒரு மையக் கோல் (தராசு முள்/குச்சி) இருக்கும். இப்போது தட்டுகளுக்குப் பதிலாக இரண்டு காகிதத் தட்டுகளை எடுத்துக் கொள்ளுங்கள். மையக் கோலுக்கு ஒரு குச்சியை எடுத்துக் கொள்ளுங்கள். படத்தில் காட்டியுள்ளபடி படிப் படியாகச் செய்து ஒரு தராசை உருவாக்குங்கள். எடைக் கற்களுக்குப் பதிலாகச் சிறிய, லேசான கற்களைப் பயன்படுத்துங்கள். அதாவது, ஒரு நிகழ்வை மேடையேற்றும்போது தேவையான பொருட்கள் கிடைக்கவில்லை என்றாலோ, அல்லது மாற்றுப் பொருட்களும் கிடைக்காத சூழல் ஏற்பட்டாலோ, நாமே இதுபோன்று சில பொருட்களைத் தயாரித்துப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




- நிகழ்வுக்கு ஏற்ப தேவையான பொருட்கள் கிடைக்காதபோது மாற்றுப் பொருட்களைப் பற்றிச் சிந்திக்கச் சொல்ல வேண்டும். சூழ்நிலைக்கு ஏற்ப என்னென்ன மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்தலாம் என்பதை விவாதிக்க வேண்டும்.
- மாற்றுப் பொருட்களைத் தேர்ந்தெடுக்கும்போது அவை இயற்கையான அல்லது சுற்றுச்சூழல் சார்ந்தவையாக இருக்க வேண்டும் என்ற தகவலை அளிக்க வேண்டும்.

CG –2/3/4
C – 2.1/3.1/4.1
LO–04AE/25/30/36

### பொருட்களை முறைப்படி அடுக்கும்போது -

நிகழ்வு அல்லது நாடகத்தை மேடையேற்றும்போது அதற்குத் தேவையான பொருட்களைப் பற்றி நாம் குழுவாக விவாதித்துவிட்டோம். கிடைத்த பொருட்களைச் சேகரித்து இப்போது பயிற்சியைத் தொடங்குவோம். இல்லையெனில், நாடகத்தை நிகழ்த்தும்போது ஏதேனும் குளறுபடிகள் ஏற்படா வண்ணம் இருக்க, நாம் அனைவரும் எவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும், எவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

- பயன்படுத்துவதற்கு எளிதான மற்றும் எடை குறைந்த பொருட்களாக அவை இருக்க வேண்டும்.
- நம்மிடம் இல்லாத பொருட்களுக்குப் பதிலாக, அவை போன்றே தோற்றமளிக்கும் பொருட்களைக் காகித அட்டைகள்/குச்சிகள் போன்ற பொருட்களைக் கொண்டு நாமே உருவாக்க வேண்டும்.
- பயிற்சியின்போதும் இதே பொருட்களைத்தான் தொடர்ந்து பயன்படுத்தப் போகிறோம். எனவே, அவை உடைந்துவிடாதபடி கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- கூர்மையான மற்றும் முனைகளைக் கொண்ட பொருட்களைப் பயன்படுத்தும்போது காயம் ஏற்படாமலும், குத்திவிடாமலும் கவனமாக இருக்க வேண்டும்.

1. மூல ஏழு சுரங்களை 'சுத்த சுரங்கள்' என்கிறார்கள். **ஸா ரெ க ம ப த நி**

2. மூல இடத்தைவிட அரைச் சுரம் கீழே பாடப்படும் சுரங்களை 'கோமல் சுரங்கள்' என்கிறார்கள். கோமல் சுரத்தை எழுதும்போது சுரத்திற்குக் கீழே '—' என்னும் கிடைக்கோடு குறியீடு இடுகிறார்கள். **ரெ க த நி**

3. மூல இடத்தைவிட அரைச் சுரம் உயரமாகப் பாடப்படும் சுரத்தை 'தீவ்ர சுரம்' என்கிறார்கள். தீவ்ர சுரத்தை அடையாளம் காண சுரத்தின் தலையின் மேல் ஒரு நிற்கும் கோடு இடுகிறார்கள். **ம**

ஏழு சுத்த சுரங்கள் + நான்கு கோமல் + ஒரு தீவ்ர சுரம் சேர்ந்து = பன்னிரண்டு சுரங்கள் உருவாகின்றன.

சுத்த, கோமல், தீவ்ர என 12 சுரங்களின் வரிசை கீழ்க்கண்டவாறு

| ஸா | _ரெ_ | ரெ | _க_ | க | ம | 'ம | ப | _த_ | த | _நி_ | நி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுத்த | கோமல் | சுத்த | கோமல் | சுத்த | சுத்த | தீவ்ர | சுத்த | கோமல் | சுத்த | கோமல் | சுத்த |

### சுர அலங்காரம்

**சுரங்களை ஒழுங்கான வரிசையில் அமைப்பதே சுர அலங்காரம் (ஸ்வராலங்காரம்).** கீழ்க்கண்ட சுத்த சுர அலங்காரங்களைப் பயிற்சி செய்யுங்கள்.

1. **சுரங்களின் ஏறுவரிசை ஆரோகணம்** - ஸாரெக ரெகம மபத பதநி தநிஸாம்
   சுரங்களின் இறங்குவரிசை அவரோகணம் - ஸாம்நித நிதப தபம பமக மகரெ கரெஸா
2. **ஆரோகணம்** - ஸாரெகம ரெகமப கமபத மபதநி பதநிஸாம்
   **அவரோகணம்** - ஸாம்நிதப நிதபம தபமக பமகரெ மகரெஸா

இவ்வாறு இன்னும் பல்வேறு வகைகளில் சுரங்களின் அமைப்புகளை உருவாக்கி அலங்காரங்களைத் தயாரியுங்கள்.

- சுரங்களின் ஏறுவரிசை மற்றும் இறங்குவரிசை குறித்து விவாதிக்கவும்.
- சுரம் மற்றும் சுர வகைகளுக்கு இடையேயான வேறுபாட்டைச் சொல்லவும்.
- முதல் பக்கத்தில் உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்து தாளம்-சுருதியுடன் பயிற்சி செய்து கொள்ளவும்.

CG –2
C – 2.2
LO–
04AE46

**நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்:**

இசையின் சப்தகம் (ஏழு சுரத் தொகுதி) முழுமையடைய, மேல் சப்தகத்தின் **'ஸாம்'** (சா) பயன்படுத்தப்படுகிறது.

**ஸா** மற்றும் **ப** - அசையாச் சுரங்கள் (எந்தக் குறியீடும் இல்லை).

ரெ க த நி - சுரங்களுக்குக் கீழே ஒரு கோடு என்றால் கோமல் (மிருதுவான) சுரம்.

ம' - சுரத்தின் மேல் நிற்கும் கோடு என்றால் தீவ்ர (கூர்மையான) சுரம்.

## எனது செயல்பாடு

**அ. கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.**

1. ________________ கோமல் சுரங்கள்.
2. _________________ இது தீவ்ர சுரம்.
3. இசையில் ___________ சுத்த சுரங்கள்.

**ஆ. அலங்காரத்தை முழுமையாக எழுதி, சுருதியில் பாடப் பயிற்சி செய்யுங்கள்.**

1. ஆரோகணம் - ஸாரெக ரெகம ..................................................

   அவரோகணம் - ஸாநித நிதப ..................................................

2. ஆரோகணம் - ஸாரெகம ரெகமப ..................................................

   அவரோகணம் - ஸாநிதப நிதபம ..................................................

**இ. சுரங்களின் வகைகளை எழுதுங்கள்.**

1. .............................. 2. .............................. 3. ..............................

**ஈ. கீழே உள்ள கட்டங்களில் பன்னிரண்டு சுரங்களை நிரப்புங்கள்.**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஸா | | ரெ | | க | ம | | ப | த | | | நி |

- அலங்காரங்களைப் பயிற்சி செய்து கொள்ளவும்.
- கிடைக்கும் கருவி அல்லது ஹார்மோனியம் செயலியின் வழியாக அலங்காரங்களைப் பயிற்சி செய்து கொள்ளவும்.
- முதல் பக்கத்தில் உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்து தாளம்-சுருதியுடன் பயிற்சி செய்து கொள்ளவும்.

CG –2
C – 2.2
LO–04AE46



# 13. வாருங்கள் தாளம் போடுவோம்



நமக்குப் பிடித்த பாடல்களுக்கேற்ப நம் கால்கள் அறியாமலேயே தாளம் ஓடுகின்றன; சில சமயம் நாம் பெஞ்சில் கையால் தட்டித் தாளம் போடுகிறோம் அல்லது கைதட்டித் தாளம் போடுகிறோம்.

இப்போது ஒரு விளையாட்டு விளையாடுவோம்.

தட்டு-கரண்டி அல்லது கிண்ணம்-கரண்டி எடுத்து ஒன்று இரண்டு மூன்று நான்கு, ஒன்று இரண்டு மூன்று நான்கு என்று தாளம் போடுவோம்; அல்லது வெற்றுப் பிளாஸ்டிக் பாட்டிலில் மணலையோ பருப்பையோ நிரப்பி ஒன்று இரண்டு மூன்று நான்கு, ஒன்று இரண்டு மூன்று நான்கு என்று தாளம் போடுவோம்.

**நினைவில் கொள்ளுங்கள்:**
பாட்டு, இசைக்கருவி வாசிப்பு மற்றும் நடனத்தில் காலத்தை அளக்கும் ஒழுங்கான முறையை 'தால்' (தாளம்) என்று சொல்கிறோம்.

இசையில் பல வகையான தாளங்கள் உள்ளன. தாளத்தில் மாத்திரை, பிரிவு, ஸம், கால் என்னும் பகுதிகள் உள்ளன. இந்தப் பகுதிகளைப் பற்றிச் சுருக்கமாக அறிந்துகொள்வோம்.

1. **மாத்ரா** – தாளத்தை அளக்கப் பயன்படுத்தும் ஒவ்வொரு தட்டலும் **'மாத்ரா'** (மாத்திரை)ஆகும்.
2. **விபாக்** – தாளத்தில் உள்ள மாத்திரைகளின் சிறிய குழுக்களை **'விபாக்'** (பிரிவு) என்கிறோம்.
3. **ஸம்** – தாளத்தின் முதல் மாத்திரையை **'ஸம்'** என்கிறோம். முதல் மாத்திரையில் உரக்கக் கைதட்டி **'ஸம்'** காட்டுகிறோம். ஸம்மை 'X' குறியால் குறிக்கிறோம்.
4. **கால்** – தாளத்தில் கைதட்டாமல், கையைக் காற்றில் பக்கவாட்டில் நீட்டிக் காட்டப்படும் மாத்திரையை **'கால்'** என்கிறோம். காலை 'O' குறியால் குறிக்கிறோம்.

இன்று இசையில் உள்ள இரண்டு தாளங்களைப் பற்றி அறிந்து, கைதட்டிப் பயிற்சி செய்வோம்.

**தாள் கேஹர்வா**

மாத்திரை : 8 விபாக் : 2 (4-4 மாத்திரைகள்)

ஸம் : 1ஆம் மாத்திரையில் கால் : 5ஆம் மாத்திரையில்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாத்திரை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| ஒலிச்சொல் | தா | கே | ந | தீ | ந | க | தீ | ந |
| குறி | X | | | | O | | | |
| | ஸம் | | | | கால் | | | |

**பாடப்புத்தகத்தில் உள்ள 'சந்தாராணி, சந்தாராணி...' என்னும் பாடல் கேஹர்வா தாளத்தில் உள்ளது. தாளக் கைதட்டலைப் போட்டு பாடல்களைப் பயிற்சி செய்யுங்கள்.**

- எண்களைச் சொல்லிக் கைதட்டித் தாளப் பயிற்சி செய்விக்கவும்.
- தாளத்தில் ஸ்வர அலங்காரப் பயிற்சி செய்விக்கவும்.
- தாளக் கைதட்டலுடன் கேஹர்வா தாளத்தில் உள்ள பாடல்களைப் பயிற்சி செய்விக்கவும்.
- விளையாட்டை எப்படி விளையாடுவது என்பதை மாணவர்களுக்கு விளக்கிச் சொல்லவும்.

CG –1/3
C – 1.1/3.2
LO–04AE41
/43



## கேஹர்வா தாளத்தின் வட்டம்

- விளையாட்டு மைதானத்தில் அல்லது வகுப்பறையில் சுண்ணாம்புக் கட்டியால் ஒரு பெரிய வட்டம் வரையுங்கள்.
- படத்தில் காட்டியுள்ளபடி அந்த வட்டத்தை 8 சமமான பாகங்களாகப் பிரித்து, அவற்றுக்கு வரிசையாக 1 முதல் 8 வரை எண் இடுங்கள்.
- 1ஆம் எண் பாகத்தில் பெரிய எழுத்தில் ‘தா’ (ஸம்-X) என எழுதுங்கள்.
- 5ஆம் எண் பாகத்தில் பெரிய எழுத்தில் ‘ந’ (கால்-O) என எழுதுங்கள்.
- குழுக்களை உருவாக்குங்கள். இதற்காக வகுப்பின் 8 மாணவர்கள் இந்த வட்டத்தின் 8 பாகங்களில் நிற்கவும். (படத்தில் குழந்தைகள் நிற்பது போல). மீதி மாணவர்கள் வட்டத்திற்கு வெளியே நின்று கவனிக்கட்டும்.
- செயலும் அசைவும்: ஒவ்வொரு எண்ணுக்கும் (மாத்திரைக்கும்) வட்டத்தில் உள்ள மாணவர்கள் கீழ்க்கண்டவாறு செயல்படுங்கள்.
- 1ஆம் மாத்திரை (ஸம் - தா): 1ஆம் இடத்தில் நிற்கும் மாணவன் இரு கைகளையும் காற்றில் மேலே உயர்த்தி உரக்க ‘‘தா’’ என்று சொல்லிக் குதிக்க வேண்டும். (மற்ற அனைத்து மாணவர்களும் உரக்கக் கைதட்டுவர்).
- 2, 3, 4 மாத்திரைகள் (கே, ந, தீ): முறையே 2, 3, 4 ஆம் இடங்களில் நிற்கும் மாணவர்கள் தத்தம் இடத்திலேயே ஒரு மெல்லிய கைதட்டலுடன் தங்கள் ஒலிச்சொற்களைச் சொல்லட்டும்.
- 5ஆம் மாத்திரை (கால்-ந): 5 ஆம் இடத்தில் நிற்கும் மாணவர்கள் ’’ந’’ என்று சொல்லும்போது கைதட்டாமல், இரு கைகளையும் பக்கவாட்டில் விரித்து ’கால்’ (வெற்றிடம்) காட்டட்டும்.
- 6, 7, 8 ஆம் மாத்திரைகள் (க, தீ, ந): முறையே 6, 7, 8 ஆம் இடங்களில் நிற்கும் மாணவர்கள் தத்தம் இடத்திலேயே மெல்லியதாகக் கைதட்டி ஒலிச்சொல்லை முடிக்கட்டும்.

## விளையாட்டின் இரண்டாம் கட்டம் (சுழலும் வட்டம்):

தத்தம் இடத்திலுள்ள ஒலிச்சொற்கள் உங்களுக்கு மனப்பாடமாகிவிட்டால், இசை அல்லது கைதட்டலின் தாளத்திற்கேற்ப கடிகார முட்களின் திசையில் (Clockwise) வட்டத்தைச் சுற்றி நகருங்கள்.

- ஆசிரியர் ‘1’ அல்லது ‘தா’ என்று சொல்லியதும், 1ஆம் எண் இடத்தில் (ஸம் மீது) இருக்கும் மாணவன் சட்டென்று குதித்து உரக்கக் கைதட்ட வேண்டும்.
- ஆசிரியர் ‘5’ அல்லது ’கால்’ என்று சொல்லியதும், 5ஆம் எண்ணில் இருக்கும் மாணவன் கைதட்டாமல், கைகளை விரித்து ‘கால்’ என்று காட்ட வேண்டும். இவ்வாறு விளையாட்டை விளையாட வேண்டும்.
- வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களும் குழுக்களாகப் பிரிந்து இந்த தாள விளையாட்டை விளையாட வேண்டும்.

### தால் தாத்ரா

மாத்திரை: 6 பிரிவு: 2 (3, 3 மாத்திரைகள்)

ஸம்: 1ஆம் மாத்திரையில் கால்: 4ஆம் மாத்திரையில்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாத்திரை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| ஒலிச்சொல் | தா | தீ | நா | தா | தீ | நா |
| குறி | X | | | O | | |
| | ஸம் | | | கால் | | |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| **தா** | **தீ** | **நா** | **தா** | **தீ** | **நா** |
| X | | | O | | |
| **ஸம்** | | | **கால்** | | |

**பாடப்புத்தகத்தில் உள்ள ‘யா பாரதாத் பந்துபாவ் நித்ய வசு தே...’ என்னும் பாடல் தாத்ரா தாளத்தில் உள்ளது. தாளக் கைதட்டலைப் பிடித்து பாடலைப் பயிற்சி செய்யுங்கள்.**

## தாத்ரா தாளத்தின் தொடர்வண்டி

தாத்ரா தாளத்தில் 6 மாத்திரைகளும், 3-3 மாத்திரைகள் கொண்ட 2 பிரிவுகளும் உள்ளன. 1 ஆம் இடத்தில் 'ஸம்' (கைதட்டல்) மற்றும் 4 ஆம் இடத்தில் 'கால்' (வெற்றிடம்) இருக்கும்.

- வகுப்பில் உள்ள 6 மாணவர்களைப் படத்தில் காட்டியுள்ளபடி ஒரு நேர்வரிசையில் ஒருவர் அருகே ஒருவராக நிற்க வைக்கவும்.
- அவர்களுக்கு வரிசையாக 1 முதல் 6 வரை எண் கொடுக்கவும்.
- ஒவ்வொரு மாணவனுக்கும் அவனுக்குரிய ஒரு குறிப்பிட்ட 'ஒலிச்சொல்' (தேகா) நிர்ணயித்துக் கொடுக்கவும்:
- 1 ஆம் எண் = தா (சம்)
- 2 ஆம் எண் = தீ
- 3 ஆம் எண் = நா
- 4 ஆம் எண் = தா (கால்)
- 5 ஆம் எண் = தீ
- 6 ஆம் எண் = நா
- கட்டம் 1: மெதுவான வேகத்தில் பயிற்சி: ஆசிரியரோ அல்லது வகுப்பில் உள்ள மற்ற குழந்தைகளோ மெதுவாக 1 முதல் 6 வரை எண்களை எண்ண வேண்டும். எந்த மாணவனின் எண் வருகிறதோ, அவன் தன் ஒலிச்சொல்லைச் சொல்லிக் கீழ்க்கண்ட செயலைச் செய்ய வேண்டும்:
- 1ஆம் எண் (தா-சம்): இந்த மாணவன் உரக்க ''தா!'' என்று சொல்லி இரு கைகளாலும் பெரிதாகக் கைதட்டி, இடத்திலேயே சிறிதாகக் குதிக்க வேண்டும்.
- 2ஆம் மற்றும் 3 ஆம் எண் (தீ, நா): இவர்கள் தத்தம் ஒலிச்சொல்லைச் சொல்லி மெல்லச் சொடக்குப் போடவோ அல்லது காலால் தரையில் மெல்லத் தட்டவோ வேண்டும்.
- 4ஆம் எண் (தா-கால்): இது இந்தத் தாளத்தின் 'கால்' (மாற்றம்). எனவே 4 ஆம் எண் குழந்தை ''தா!'' என்று சொல்லும்போது கைதட்டக் கூடாது; மாறாக இரு கைகளையும் காற்றில் பக்கவாட்டில் விரித்து தலையை அசைக்க வேண்டும் (கைதட்டல் இல்லை என்பதைக் காட்ட).
- 5ஆம் மற்றும் 6 ஆம் எண் (தீ, நா): இவர்கள் 2, 3 ஆம் எண்களைப் போலவே மெல்லச் சொடக்குப் போட்டு ஒலிச்சொல்லை முடிக்க வேண்டும்.
- கட்டம் 2: வேகத்தை அதிகரித்தல்: ஒருமுறை வரிசையாக ஒலிச்சொற்கள் சரியாக வரத் தொடங்கியதும், ஆசிரியர் கைதட்டலின் வேகத்தை அதிகரிக்க வேண்டும். 1 முதல் 6 வரையிலான சுழற்சிகளைத் தொடர்ந்து நடத்த வேண்டும். இதனால் குழந்தைகளிடையே ஓர் அழகான இசை உருவாகும்: ''தா(கைதட்டல்) - தீ - நா தா(கை விரித்தல்) - தீ - நா''.

## எனது செயல்பாடு

1. **கோடிட்ட இடத்தில் சரியான குறியை எழுதுங்கள்.**

அ. ஸம்-ஐ _______________ என்னும் குறியால் காட்டுகிறோம்.

ஆ. கால்- ஐ _______________ என்னும் குறியால் காட்டுகிறோம்.

2. **கீழே உள்ள ஒலிச்சொல் வரிசையை நிறைவு செய்யுங்கள்.**

**அ.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தா | கே | | | ந | க | | |

**ஆ.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தா | தீ | நா | | | |

3. **கீழே கொடுக்கப்பட்ட தாளங்களின் தகவல் அட்டவணையை நிறைவு செய்யுங்கள்.**

| **தாளம்** | **மாத்திரை** | **பிரிவு/கண்டம்** | **ஸம்** | **கால்** |
|---|---|---|---|---|
| கேஹர்வா | | | | |
| தாத்ரா | | | | |

- விளையாட்டை எப்படி விளையாடுவது என்பதை மாணவர்களுக்கு விளக்கிச் சொல்லவும்.
- தாளக் கைதட்டலைப் பிடித்து பாடல்களைப் பயிற்சி செய்விக்கவும்.
- முதல் பக்கத்தில் உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்து தாளத்துடனும் சுரத்துடனும் பயிற்சி செய்விக்கவும்.

CG –1/2
C – 1.1/2.1
LO–04AE41 / 43

# நடனம்







# 14. மகிழ்வுடன் நடனமாடுவோம்

குழந்தைகளே, நம் உடல் நெகிழ்வுத் தன்மை உடையதே; உடலில் பல்வேறு விளையாட்டு, நடன அசைவுகளைச் செய்யும் திறன் உள்ளது. எடுத்துக்காட்டாக, குதித்தல், குனிதல், திரும்புதல் முதலியன. இந்த அசைவுகளுக்கு லயத்தையும் தாளத்தையும் நாம் சேர்க்கும்போது, அவை நடனமாக மாறுகின்றன.




## நடனம்

முழு உடலையும் பயன்படுத்தி, இசை மற்றும் தாளத்தின் துணையோடு வெளிப்படுத்தப்படும் உணர்வுகளின் வெளிப்பாடே நடனம்.

குழந்தைகளே, மகிழ்ச்சியை வெளிப்படுத்தவே நடனம் ஆடப்படுகிறது.

நடனத்தால் பல நன்மைகள் உள்ளன.

உங்களுக்கு நடனம் ஆட ஏன் பிடிக்கிறது என்பதை எழுதுங்கள்.

- நடனத்தின் வரையறையையும் அதன் நன்மைகளையும் வகுப்பில் விளக்கிச் சொல்லவும்.
- மனித வாழ்வில் நடனத்தின் முக்கியத்துவம் குறித்து வகுப்பில் கலந்துரையாடவும். மேலும் 1-2 வாக்கியங்கள் எழுத ஊக்குவிக்கவும்.

CG – 1
C – 1.1
LO – 04AE54

## தனி நடனம்

### வாருங்கள், செய்து பார்ப்போம்!

நம் எல்லோருக்கும் விளையாட்டு விளையாட பிடிக்கும் அல்லவா? இந்த விளையாட்டுகளில் நடன அசைவுகள் எப்படி மறைந்திருக்கின்றன என்பதைப் பார்ப்போம்!

கீழே கொடுக்கப்பட்ட அசைவுகளைக் கவனித்து, நேரிலேயே செய்து பாருங்கள்!




(நொண்டிஅடித்தல் விளையாட்டிலிருந்து உருவான நடன அசைவை இடது மற்றும் வலது பக்கங்களில் குதித்துச் செய்து பாருங்கள்.)



(நீச்சல் செயலிலிருந்து உருவான நடன அசைவை இடது மற்றும் வலது பக்கங்களில் செய்து பாருங்கள்.)

குழந்தைகளே, வேடிக்கையாக இருந்தது அல்லவா? வாருங்கள், இப்போது இது போன்ற சில விளையாட்டுகளைக் கண்டுபிடித்து, அவற்றை நடன அசைவுகளாக எப்படி மாற்றலாம் என்று கற்பனை செய்து, அதன் செயலையும் பார்ப்போம்.

- செயல்பாட்டில் கொடுக்கப்பட்ட படங்களைக் கவனிக்கச் சொல்லவும், அவற்றை நேரிலேயே செய்ய ஊக்குவிக்கவும்.
- வகுப்பில் பல்வேறு செயல்கள் மற்றும் அசைவுகள் குறித்துக் கலந்துரையாடவும், அவற்றை நேரிலேயே செய்து பார்க்க ஊக்குவிக்கவும்.

CG – 1
C – 1.1
LO – 04AE54

**பார்ப்போம் – கற்போம் – நடனமாடுவோம்!**

இதுவரை நாம் நடனத்தின் சில அசைவுகளைத் தனியாகச் செய்யக் கற்றுக்கொண்டிருக்கிறோம், ஆனால் நாம் அனைத்து நண்பர்களும் (ஆண், பெண் இருபாலரும்) சேர்ந்து ஆடினால் இன்னும் அதிக மகிழ்ச்சி கிடைக்கும், இல்லையா?

குழுவாக ஆடும்போது நாம் ஒருவருக்கொருவர் இணைந்து தாளம் பிடிக்கிறோம், ஒரே மாதிரியான அசைவுகளைச் செய்கிறோம், மகிழ்ச்சியுடன் நடனத்தை வழங்குகிறோம். அப்போது அதன் வழியாக ஒரு தனிச்சிறப்பான ஆற்றல் கிடைக்கிறது. இப்போது நாம் இந்த விஷயத்தைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளப் போகிறோம்.

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நபர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரே தாளத்திலும் லயத்திலும் நடனத்தை வழங்கும்போது அதை 'குழு நடனம்' (Group Dance) என்று அழைக்கிறோம்.

குழு நடனத்தால் என்னென்ன பயன்கள் உள்ளன என்பதைப் பார்ப்போம்.




குழு நடனத்தில் நாட்டுப்புற நடனங்களும் அடங்கும். பண்டிகை-விழா மகிழ்ச்சியைக் கொண்டாட அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து நடனமாடுகிறார்கள். இதன் வழியாகவே நாட்டுப்புற நடனம் உருவாகிறது.

உங்களுக்குப் பரிச்சயமான நடனத்தை முதல் பக்கத்தில் உள்ள QR குறியீட்டில் கொடுக்கப்பட்டுள்ள வீடியோவில் பாருங்கள். வீடியோவில் உள்ள நடனத்தை கவனித்து, அதில் உள்ள அசைவுகளைப் பின்பற்றி, பயிற்சி செய்து, வழங்குங்கள்.

- பரிச்சயமான நடனத்தின் வீடியோவைக் காண்பித்து, அதைப் பின்பற்றுவதற்கும், பயிற்சி செய்வதற்கும், வழங்குவதற்கும் ஊக்கம் அளிக்க வேண்டும்.

CG – 1
C – 1.1, 1.2
LO–04AE54/55

## அனைவரும் சேர்ந்து நடனமாடுவோம்!

கொடுக்கப்பட்டுள்ள குழு நடனப் படங்களைக் கவனித்து, அந்த நடனத்தை நேரடியாகச் செய்து பாருங்கள்.

### 1. தன்கர் நடனம்

தன்கர் நடனம் என்பது மகாராஷ்டிராவின் தன்கர்(இடையர்) சமூகத்தின் பாரம்பரிய நாட்டுப்புற நடனமாகும். இந்த நடனம் முக்கியமாகப் பண்டிகை, யாத்திரை மற்றும் விழாக் காலங்களில் வழங்கப்படுகிறது. டோல், ஹல்கி (ஒருவகை மேளம்) மற்றும் பிபாணி (ஒருவகை ஊதுகுழல்) ஆகியவற்றின் தாளத்திற்கு உற்சாகத்துடன் இந்த நடனம் ஆடப்படுகிறது.



தன்கர் நடன அசைவு 1



தன்கர் நடன அசைவு 2

### 2. லேஸீம்

லேஸீம் என்பது மகாராஷ்டிராவின் பாரம்பரிய நாட்டுப்புற நடனமாகும். கையில் லேஸீம் (மணிகள் கட்டப்பட்ட ஒருவகைக் கருவி) ஏந்தி, தாளத்திற்கேற்ற அசைவுகள், தாண்டல்கள் மற்றும் இசையின் தாளத்திற்கு ஏற்ப இந்த நடனம் ஆடப்படுகிறது.



லேஸீம் அசைவு 1



லேஸீம் அசைவு 2

- லேஸீம் மற்றும் தன்கர் நடனத்தை மாணவர்களைக் கொண்டு செய்து காட்டச் செய்ய வேண்டும்.

CG – 1
C – 1.1, 1.2
LO–04AE54
/55

### 3. லாவணி

லாவணி என்பது மகாராஷ்டிராவில் மிகவும் பிரபலமான நாட்டுப்புற நடனமாகும். இந்த நடனம் முக்கியமாக டோல்கீ (ஒருவகை மேளம்) தாளத்திற்கு வழங்கப்படுகிறது. லாவணியில் நடிப்பு, முகபாவ நடிப்பு மற்றும் உணர்வுபூர்வமான அசைவுகளுக்கு முக்கியத்துவம் உண்டு.



லாவணி அசைவு 1



லாவணி அசைவு 2

### 4. வார்லி நடனம்

வார்லி நடனம் என்பது வார்லி பழங்குடி சமூகத்தின் பாரம்பரிய நாட்டுப்புற நடனமாகும். இந்த நடனம் பண்டிகை, திருமணம் மற்றும் மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களில் ஆடப்படுகிறது. இயற்கை, ஒற்றுமை மற்றும் கூட்டு வாழ்க்கையின் தோற்றம் இந்த நடனத்தின் வழியாக வெளிப்படுகிறது. எளிமையும் உற்சாகமும் வார்லி நடனத்தின் சிறப்பியல்புகளாகும்.



வார்லி அசைவு 1



வார்லி அசைவு 2

மேற்கண்ட நடனங்களை முதல் பக்கத்தில் உள்ள க்யூஆர் குறியீட்டில் கொடுக்கப்பட்டுள்ள வீடியோக்களில் பாருங்கள். வீடியோவில் கொடுக்கப்பட்டுள்ள நடனத்தைக் கவனித்து, அதில் உள்ள அசைவுகளைப் பின்பற்றி, பயிற்சி செய்து, வழங்குங்கள்!

## எனது செயல்பாடு

வகுப்பில் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு குழுவும் நாட்டுப்புற நடனத்தைப் பயிற்சி செய்து வகுப்பில் வழங்க வேண்டும்.

- படங்களை அடிப்படையாகக் கொண்டு நடன அசைவுகளைச் செய்ய உதவ வேண்டும்.
- பரிச்சயமான நடனங்களின் வீடியோவைக் காண்பித்து, அதைப் பின்பற்றுவதற்கும், பயிற்சி செய்வதற்கும், வழங்குவதற்கும் ஊக்கம் அளிக்க வேண்டும்.

CG – 1
C – 1.1, 1.2
LO–04AE54/55

# 15. நடனமயமான வாழ்க்கை

## அசைவுகளின் வழியாக நடனம்

நாம் தினசரி வாழ்க்கையில் பல அசைவுகளைச் செய்கிறோம். உதாரணமாக: நடப்பது, ஓடுவது, வளைவது, தாண்டுவது, கையை அசைப்பது. இந்த அன்றாட அசைவுகள் நடனத்திலும் பயன்படுத்தப்படுகின்றன, ஆனால் அவை லயம், தாளம் மற்றும் உணர்வுடன் சேர்த்துச் செய்யப்படுகின்றன. அப்போது இந்த அன்றாட அசைவுகள் நடன அசைவுகளைப் போலத் தோன்றுகின்றன. வாருங்கள், இதுபோன்ற சில அசைவுகளைச் செய்து பார்ப்போம், அதன் வழியாக நடனத்தின் மகிழ்ச்சியை அனுபவிப்போம்.

## நடனம் நம்மைச் சுற்றிலும்!

கீழே கொடுக்கப்பட்டுள்ள அசைவுகளைக் கவனித்து, நேரடியாகச் செய்து பாருங்கள்!









## வாருங்கள் செய்து பார்ப்போம்!

அன்றாட வாழ்க்கையில் உள்ள இதுபோன்ற மற்ற அசைவுகளைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடுங்கள், மேலும் பாடலின் துணையுடன் அந்தச் செயல்களை வகுப்பில் செய்து பாருங்கள்.

- செயல்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கவனிக்கச் சொல்லி, அவற்றை நேரடியாகச் செய்வதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும்.
- வகுப்பில் பல்வேறு செயல்கள் மற்றும் அசைவுகள் குறித்துக் கலந்துரையாடவும், அவற்றை நேரடியாகச் செய்து பார்க்கவும் ஊக்குவிக்க வேண்டும்.

CG – 4
C – 4.1
04AE56/59/61

## • கைகளின் மொழி

அன்றாட வாழ்க்கையில் நாம் நம் கைப்பாதங்களையும் விரல்களையும் பல்வேறு வழிகளில் பயன்படுத்துகிறோம். இந்த அசைவுகளில் நடனம் மறைந்திருக்கிறது. இதுபோன்ற நடன அசைவுகளை அறிந்து கொள்வோம்.

### வாருங்கள் கைமுத்திரைகளின் மொழியைப் பேசுவோம்!

கட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள கைமுத்திரையை அன்றாட வாழ்க்கையில் நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பற்றி வகுப்பில் கலந்துரையாட வேண்டும். அந்த அசைவை நேரடியாக வழங்கிப் பாருங்கள், மேலும் அதன் ஒரு பட்டியலைக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுங்கள்.

1. மலர்ந்த் தாமரை கைமுத்திரை




2. ஊசிமுத்திரை




3. சிகரமுத்திரை




• கட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள கைமுத்திரைகள் அன்றாட வாழ்க்கையில் எப்படிப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடவும், நேரடியாகச் செய்து பார்க்கவும் ஊக்குவிக்க வேண்டும்.

CG – 4
C – 4.1
04AE56/59/61

## வாருங்கள் ஜோடிகளைப் பொருத்துவோம்!

இப்போது நாம் சில கைமுத்திரைகளைப் பார்த்தோம். மேலே சில படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன, அவற்றை எதற்காகப் பயன்படுத்த முடியும் என்பதைக் கற்பனை செய்யுங்கள். இப்போது நேர்மாறான செயலைச் செய்து பார்ப்போம்- கொடுக்கப்பட்டுள்ள கைமுத்திரைகளிலிருந்து, உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள படங்களில் அது எந்தப் படத்தைப் பின்பற்றி அமைந்துள்ளது என்பதைக் கோடு வரைந்து ஜோடிகளைப் பொருத்துங்கள்.

1.  

2.  

3.  

4.  

5.  

- சரியான ஜோடிகளைப் பொருத்த உதவ வேண்டும்.

CG – 4
C – 4.1
04AE59/61

## இயற்கையில் உள்ள நடன அசைவுகள்

இயற்கையில் பல அழகான அசைவுகள் தென்படுகின்றன. மரங்களின் இலைகளும் மலர்களும் காற்றில் அசைகின்றன, மழைத் தாரைகள் பெய்கின்றன, ஆறு ஓடுகிறது. இந்த அசைவுகளில் லயம், வேகம் மற்றும் அழகு உள்ளது. நடன அசைவுகளும் இதுபோலவே லயத்துடனும் அழகுடனும் இருக்கின்றன. எனவே இயற்கையில் உள்ள அசைவுகளிலிருந்து நடனத்திற்கான உத்வேகம் கிடைக்கிறது.

## இயற்கையில் நடனத்தைத் தேடுவோம்!

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களில் உள்ள அசைவுகளை அடையாளம் கண்டு, அவற்றை நடன முறையில் செய்து பாருங்கள்.

1.  

2.  

3.  

- கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களில் உள்ள அசைவை அடையாளம் கண்டு, அதை நடன முறையில் செய்து பார்க்க ஊக்குவிக்க வேண்டும்.

CG – 4
C – 4.1
LO – 04AE59, 04AE61

4.  

5.  

**வாருங்கள் விவாதிப்போம்!**

இயற்கையில் நீங்கள் பார்த்த மற்ற செயல்கள் மற்றும் அந்தச் செயல்களின் நடன அசைவுகள் பற்றி விவாதியுங்கள். அவற்றை விவரியுங்கள், ஒப்பிடுங்கள்.

**செய்து பார்ப்போம்!**

இதுவரை கற்றுக்கொண்ட பல்வேறு அசைவுகளைப் பயன்படுத்தி, பாடநூலில் உள்ள உங்களுக்குப் பிடித்த கவிதை அல்லது பாடலுக்கு நடன அசைவுகள் செய்யுங்கள்.

## எனது செயல்பாடு

1. இயற்கையின் பல்வேறு கூறுகளின் (ஆறு, பூக்கள், பறவைகள், மரங்கள், வானவில்) அழகான படம் வரையுங்கள். இந்த ஒவ்வொரு கூறுகளின் அசைவுகளையும் உங்கள் உடல் அசைவுகள் மூலம் காட்ட முயற்சி செய்யுங்கள். வகுப்பில் உங்கள் அசைவுகளை நிகழ்த்துங்கள், மேலும் நண்பர்களின் நிகழ்ச்சியைக் கவனியுங்கள்.
2. பாடநூலில் உள்ள உங்களுக்குப் பிடித்த இயற்கைப் பாடலுக்கு நடனம் நிகழ்த்துங்கள்.

- இயற்கையில் பார்த்த செயல்கள் மற்றும் அந்தச் செயல்களின் நடன அசைவுகள் பற்றி விவாதிக்கவும், விவரிக்கவும், ஒப்பிடவும், நேரடியாக அசைவுகளைச் செய்து பார்க்கவும் சொல்ல வேண்டும்.
- இயற்கையை அடிப்படையாகக் கொண்ட பாடலைத் தேர்ந்தெடுக்கவும், அதற்கு நடனம் நிகழ்த்தவும் ஊக்குவிக்க வேண்டும்.

CG – 4
C – 4.1
04AE59/61



# 16. நடனத்தின் துணைவர்கள்



நடனம் செய்வதற்கு சில முக்கியமான விஷயங்களின் துணை இருப்பது மிகவும் அவசியம். அவை இல்லாமல் நடனத்தின் இன்பத்தை அனுபவிக்க முடியாது.

வாருங்கள், நடனத்தின் துணைவர்கள் யார் யார் என்பதைப் புரிந்துகொள்வோம்.

## அ. தாளம்

பாடல் பாடும்போதும் நடனம் செய்யும்போதும் கேட்கும் சீரான கதியை (ஒலித் தட்டலை), மேலும் அது அசைவுகளுக்கு வேகத்தையும் திசையையும் தருகிறது - அதை 'தாளம்' என்று சொல்கிறோம்.

தாளத்தால் நடனம் லயத்துடனும் அழகாகவும் ஆகிறது ; மட்டுமல்லாமல் அதை ஒரு குறிப்பிட்ட வேகத்தில் நிகழ்த்த முடிகிறது.

### தாதரா தாளத்தின் விளையாட்டை விளையாடுவோம் !

நீங்கள் 'குளமா கரையா' (வட்டத்திற்குள் மற்றும் வெளியே குதிக்கும் விளையாட்டு) விளையாடியதுண்டா ? அதே விளையாட்டில் தாளத்தின் சுவாரசியத்தைப் பார்ப்போம்.

வட்டத்திற்குள்(குளம்) குதிக்கும் போது கைதட்டி 'தா தி நா' என்று சொல்லுங்கள். வட்டத்திற்கு வெளியே(கரை) குதிக்கும் போது இடுப்பில் கைகளை வைத்து 'தா தீ நா' என்று சொல்லுங்கள். இதேபோல் தாளத்தின் சொற்களைக் கூறிக்கொண்டே உங்களுக்குப் பிடித்த நடன அசைவுகளைச் செய்யுங்கள்.

| வட்டத்திற்குள் (குளம்) தாவும்போது கைதட்டுதல். | வட்டத்திற்கு வெளியே(கரை) தாவும்போது இடுப்பில் கை வைத்தல். |
|---|---|
| தா தீ நா<br>1 2 3 | தா தீ நா<br>4 5 6 |

### தாளத்தில் உள்ள வேறுபாட்டை அறியுங்கள் !

தாளத்தின் கதிக்கு ஏற்ப நடன அசைவுகள் மாறுகின்றன. அது எப்படி என்பதை அறிந்துகொள்ள, முந்தைய ஆண்டு கற்ற கேஹர்வா தாளம் மற்றும் இந்த ஆண்டு கற்ற தாதரா தாளம் ஆகிய இரண்டு தாளங்கள் பற்றியும் அவற்றில் உள்ள வேறுபாடுகள் பற்றியும் விவாதியுங்கள். இதற்காக கேஹர்வா மற்றும் தாதரா தாளத்தை முதல் பக்கத்தில் உள்ள வீடியோ QR குறியீட்டின் உதவியுடன் பாருங்கள், அவற்றில் உள்ள வேறுபாட்டைப் புரிந்துகொள்ளுங்கள்.

- கேஹர்வா மற்றும் தாதரா தாளங்கள் பற்றி வகுப்பில் விவாதிக்கச் சொல்ல வேண்டும் ; வீடியோவின் அடிப்படையில் தாளத்தால் அசைவுகளில் ஏற்பட்ட வேறுபாட்டை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.
- மேலே உள்ள விளையாட்டையும் தாளத்தில் உள்ள வேறுபாட்டையும் கிகீ குறியீட்டின் உதவியுடன் காட்டுங்கள்.

CG – 2
C – 2.2
04AE57

## ஆ. இசைக்கருவிகள்

**வாருங்கள், நடனத்தில் இசைக்கருவிகளின் பயன்பாட்டைச் சுருக்கமாகப் புரிந்துகொள்வோம்.**

வெவ்வேறு நடன வகைகளுக்கு ஏற்ப வெவ்வேறு இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

**சில அசைவுகள் மென்மையாகவும்,** சுழற்சி வடிவிலும், தடையற்ற ஓட்டத்துடனும் இருக்கும். இத்தகைய அசைவுகள் இனிமையான இசைக்கு ஏற்ப செய்யப்படுகின்றன. அந்த சமயங்களில் புல்லாங்குழல் அல்லது வயலின் போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

புல்லாங்குழல்





வயலின்



புல்லாங்குழல் அல்லது வயலினைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட இசையின் ஒலிப்பதிவைக் கேட்டு, கண்களை மூடிக்கொண்டு இசைக்கு ஏற்ப சுதந்திரமான அசைவுகளைச் செய்து பாருங்கள்.

**சில அசைவுகள் தாளம் மற்றும் கதிக்கு ஏற்பச் செய்யப்படுகின்றன.**

அப்போது தபலா அல்லது மிருதங்கம் போன்ற தாள இசைக்கருவிகள் ஒலிக்கின்றன. இந்த அசைவுகளில் கால்களின் தாள ஒலியும் கால் அசைவுகளும் ஒரு குறிப்பிட்ட லயத்தைக் காட்டுகின்றன.

மிருதங்கம்





தபலா



- தடையற்ற ஓட்டமுடைய அசைவுகள் மற்றும் கதிக்கு ஏற்பவும் செய்யப்படும் அசைவுகளை வகுப்பில் செய்து பார்க்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும்.
- தடையற்ற ஓட்டமுடைய அசைவுகளைச் செய்ய புல்லாங்குழல் அல்லது வயலின் இசையின் ஒலிப்பதிவைக் கேட்டு, கண்களை மூடிக்கொண்டு சுதந்திரமான அசைவுகளைச் செய்யும் வாய்ப்பு அளிக்க வேண்டும்.

CG – 3
C – 3.1
LO–04AE58/59/60

உங்களுக்குத் தெரியுமா?

**இசைக்கருவிகளின் வகைகள்**

இசைக்கருவிகள் முக்கியமாக 4 வகைப்படும் -

- **தந்திக் கருவிகள்** - கம்பிகளிலிருந்து ஒலி உருவாகிறது. உ-ம். வீணை, சிதார், தம்பூரா, சாரங்கி.
- **தோற்கருவிகள்** - தட்டி அல்லது அடித்து வாசிக்கப்படுகின்றன. உ-ம். தபலா, தோலக், மிருதங்கம், நகாரா.
- **காற்றுக் கருவிகள்** - ஊதி வாசிக்கப்படுகின்றன. உ-ம். புல்லாங்குழல், ஷெனாய், சங்கு, ஹார்மோனியம் (பெட்டி).
- **உலோகக் கருவிகள்** - இரண்டு உலோகங்களை ஒன்றோடொன்று தட்டி ஒலி எழுப்பப்படுபவை. உ-ம். தாளம், ஜால்ரா, மணி, சிப்பி போன்றவை.

இந்த இசைக்கருவிகள் இசைக்கு லயத்தையும் இனிமையையும் தருகின்றன.

## நடனத்திற்கான பாடல் மற்றும் இசைக்கருவிகளின் தேர்வு

**நடனப் படைப்பை உருவாக்குவோம் வாருங்கள்!!**

உங்களுக்குப் பிடித்த கவிதைக்கு ஒரு நடனப் படைப்பை உருவாக்க வேண்டும். இதற்காக உங்கள் பாடநூலில் உள்ள கவிதைகளிலிருந்து ஒரு பாடலைத் தேர்ந்தெடுங்கள். இந்தப் பாடலுக்கு நடனம் செய்ய நீங்கள் எந்தெந்த இசைக்கருவிகளைப் பயன்படுத்தலாம் என்பதை வகுப்பில் விவாதியுங்கள். அதேபோல் இந்தப் பாடலுக்கு நீங்கள் எந்தெந்த நடன அசைவுகளைச் செய்யலாம் என்பதைச் சிந்தித்து, அவற்றைப் பயிற்சி செய்யுங்கள்.

- நடனப் படைப்பை உருவாக்க பாடநூலில் உள்ள கவிதைகளிலிருந்து ஒரு பாடலைத் தேர்ந்தெடுக்கச் சொல்ல வேண்டும். அந்தப் பாடலுக்கு நடனம் நிகழ்த்த இசைக்கருவிகளைத் தேர்ந்தெடுக்கவும், நடன அசைவுகளை அமைக்கவும் வழிகாட்ட வேண்டும்.

CG – 3
C – 3.1
LO–04AE58/59

## எனது செயல்பாடு

**• பெயர்களின் வேடிக்கை!**

இசைக்கருவிகளின் பெயர்களைக் கண்டுபிடித்து வட்டமிடுங்கள்.

(துதாரி, தாளம், பாஸரீ, ஜான்ஜ், தபலா, டஃப், மிருதங்கம், வீணா, தோல்கி, தாஷா)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பா | ஸ | ரீ | தா | ஷா | த |
| து | மா | ரீ | வீ | ணா | ப |
| தோ | தா | மிரு | ப | ஜான் | லா |
| ர | ல் | ள | தங் | ஜ் | டா |
| ட | ஃப் | கி | ம் | கம் | ள |

**• வாருங்கள், செய்து பார்ப்போம்**

ஏதேனும் ஒரு எளிய இசைக்கருவியை உருவாக்குங்கள் அல்லது வீட்டிலிருந்து கொண்டு வாருங்கள் (எ.கா. மண் பாத்திரம், மணல் நிரப்பிய மூங்கில் குச்சி, எஃகு கிளாஸ் மற்றும் கரண்டி, உடுக்கை, தோலக் முதலியன).

பிறகு 'தாதரா' என்னும் தாளத்தை (தா, தி, நா, தா, தூ, நா) தேர்ந்தெடுங்கள். ஒவ்வொரு மாணவனும் ஒரு எழுத்துக்கு ஒரு இசைக்கருவியைத் தேர்ந்தெடுத்து வாசிக்க வேண்டும்.

முதலில் ஒன்றன்பின் ஒன்றாக வாசித்துப் பாருங்கள், பிறகு அனைவரும் சேர்ந்து தாளத்தை வாசிக்க முயற்சி செய்யுங்கள்.

• மாணவர்களைச் சமமான குழுக்களாக அமைக்க வேண்டும், எளிய இசைக்கருவியை உருவாக்க வழிகாட்ட வேண்டும். இதன் மூலம் இசை ஒருங்கிணைப்பை அடைய ஊக்குவிக்க வேண்டும்.

CG – 3
C – 3.1
LO–04AE58/59

# 17. பாரம்பரிய நடனம்

## நடனமும் நடனப் பாடலும்

பாடல்களிலும் கவிதைகளிலும் வார்த்தைகளுடன் உணர்வுகள், கற்பனைகள், அழகான காட்சிகள் மறைந்திருக்கின்றன. இந்த உணர்வுகளையும் எண்ணங்களையும் நாம் நடன அசைவுகளின் மூலம் வெளிப்படுத்த முடியும்.

## நடனத்தின் செயல்முறையைப் புரிந்துகொள்வோம்!

1. உங்களுக்குப் பிடித்த ஒரு கவிதையைத் தேர்ந்தெடுத்து அதை நன்றாகப் படியுங்கள்.
2. கவிதையின் பொருள், அதிலுள்ள உணர்வுகள், சூழல் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளுங்கள்.
3. ஒவ்வொரு வார்த்தைக்கும் அசைவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை; கவிதையிலுள்ள எண்ணங்களை அடையாள (குறியீட்டு) அசைவுகளின் மூலம் காட்டுங்கள்.
4. கைச்சைகைகள், முகபாவங்கள், உடல் அசைவுகள் ஆகியவற்றைப் பயன்படுத்துங்கள்.
5. கவிதையின் தாளத்தையும் உணர்வையும் மனதில் வைத்து நடனத்தை வழங்குங்கள்!



படியுங்கள்



சிந்தியுங்கள்



நடனமாடுங்கள்

- நடனத்தின் செயல்முறையை உதாரணத்துடன் தெளிவுபடுத்த வேண்டும்.
- கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வழிகாட்ட வேண்டும்.

CG – 3
C – 3.2
LO–04AE60

**வாருங்கள், கவிதைக்கு நடனம் செய்து பார்ப்போம்.**

உங்களுக்குப் பிடித்த பாடலுக்கு நடனப் படைப்பை உருவாக்க, ஒருவருக்கொருவர் விவாதித்து நடன அசைவுகளைத் தேர்ந்தெடுங்கள். தேர்ந்தெடுத்த அசைவுகளைப் பயிற்சி செய்து, நேரடியாக நடனம் நிகழ்த்துங்கள்.

ஸ்வர்காத் ஆகாஷ்கங்கா,
கங்கேலா ஸோனேரி காட்
காட்டாலா பாயர்யா ஷம்பர்,
ஜாலா ஆனந்த் ஆலி பஹார் ॥த்ரு॥

காடாஷி லாவீலா ஏக்,
ஏக் ஸ்வர்கீய கல்பதரூ
தரூலா ஃபான்த்யா ஷம்பர்,
ஜாலா ஆனந்த் ஆலி பஹார் ॥1॥

தரூச்யா ஃபான்தீவர்,
ஃபுலே ஃபுலதீ நக்ஷத்ராஞ்சீ
ஃபுலாலா பாக்ள்யா ஷம்பர்,
ஜாலா ஆனந்த் ஆலி பஹார் ॥2॥

ஸுட்ல வார ஜோராத்,
ஃபுலே விகுர்லீ பாண்யாத்
தரங் உட்லே ஷம்பர்,
ஜாலா ஆனந்த் ஆலி பஹார் ॥3॥

கங்கேலா ஆலா பூர்,
அஹோ புராச பாணி சட்ல
புடால்யா பாயர்யா ஷம்பர்,
ஜாலா ஆனந்த் ஆலி பஹார் ॥4॥

-ரத்னாகர் மட்கரி



- பல்வேறு பாடல்களுக்கு நடனம் நிகழ்த்த, அசைவுகளைக் கற்பனை செய்து நடனப் படைப்பை உருவாக்க மாணவர்களைத் தூண்ட வேண்டும்.

CG - 3
C - 3.2
Lo-04AE60

## நடனமும் பண்பாடும்

மகாராஷ்டிராவில் பல பாரம்பரிய நடன வகைகள் காணப்படுகின்றன. இந்த நடனங்களில் அந்தப் பகுதியின் வாழ்க்கை முறை, உடை அலங்காரம், இசை ஆகியவற்றின் அழகான பிரதிபலிப்பு தெரிகிறது. உதா: லாவணி, கோளி நடனம், தார்பா நடனம், லேஜிம், வாக்யா-முரலி, பாவ்ரா நடனம், வார்கரி நடனம் முதலியன.



தார்பா நடனம்



லேஜிம் நடனம்

## நடனம் பற்றி உரையாடுவோம்!

உங்கள் பகுதியில் வழங்கப்படும் ஒரு நடனம் அல்லது நாட்டுப்புற நடன வகையைக் கண்டுபிடியுங்கள். அதைப் பற்றி வகுப்பில் உரையாடுங்கள். இதனுடன், உங்கள் நண்பர்களுடன் சேர்ந்து நடனத்தின் 4-5 எளிய அசைவுகளைச் செய்து பாருங்கள்.

## நடனத்தின் படத்தை வரைவோம்!

ஒரு வார்லி ஓவியத்தை அடிப்படையாகக் கொண்டு, கற்பனைக்கு ஏற்ப 'வார்லி நடனத்தின்' படத்தை வரையுங்கள்.

- வார்லி ஓவியங்களில் காட்டப்பட்டுள்ளது போல மாணவர்களை நடன அசைவுகள் செய்யச் சொல்ல வேண்டும். உதா: ஒருவர் கையை மற்றொருவர் கையில் கோர்த்து வட்டமாக நின்று, சுழன்று நடனமாடுதல்.

CG – 4
C – 4.2
LO–04AE62

**கற்போம் - நடனமாடுவோம்!**

கிடைக்கின்ற பண்பாட்டு அல்லது பாரம்பரிய நடனத்தை அவதானியுங்கள், அதிலுள்ள அசைவுகளைப் பின்பற்றி, பயிற்சி செய்து வழங்குங்கள்!

## எனது செயல்பாடு

**படத்தைப் பார்த்துக் கேள்விகளுக்கு விடைகளைக் கண்டுபிடிப்போம்.**



1. படத்தில் எந்த வகை நடனம் தெரிகிறது?
2. நடனமாடும்போது எந்தெந்த இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன?
3. எந்த முறையில் நின்று நடனம் ஆடப்படுகிறது?
4. உடை அலங்காரம் எப்படி உள்ளது?

- பழக்கமான பண்பாட்டு/பாரம்பரிய நடனத்தின் (உதா - வார்கரி நடனம்) காணொளியைக் காண்பித்து, அதைப் பின்பற்றி, பயிற்சி செய்து வழங்க ஊக்குவிக்க வேண்டும். இத்தகைய பண்பாட்டுக் கலை வெளிப்பாடுகளைக் காணவும், பண்பாட்டின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளவும் குழந்தைகளை ஊக்குவிக்க வேண்டும்.

CG – 4
C – 4.2
LO–04AE62

# 18. கலைப் பண்பாடு

நமது பண்பாடும் மரபும் அறிவியலுடன் இணைக்கப்பட்டுள்ளன; அதன் மூலம் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழும் உந்துதல் கிடைக்கிறது. சில பருவங்களுக்கேற்ப வரும் பண்டிகைகள், விழாக்கள், மற்றும் மரபுகளின் வழியாக, ஒவ்வொரு பருவத்திற்கும் நம் ஆரோக்கியத்திற்கு ஏற்ற உணவுப் பொருட்கள், ஆடைகள், பல்வேறு கலைகளின் வெளிப்பாடு ஆகியவற்றை நாம் காண முடிகிறது. இந்தப் பண்பாட்டைப் போற்றிக் காப்பதால் மக்கள் அனைவரும் ஒன்றுகூடுகிறார்கள். தங்கள் உறவுகள் இணைந்து சேர்ந்து மகிழ்கிறார்கள். பல்வேறு கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் மதிப்பு உயர்கிறது.

பண்டிகை-விழாக்களின் காரணமாக நடனம், நாடகம், அலங்காரம், சிற்பம், ஓவியம், பாடல், இசை வாசித்தல் ஆகியவற்றுடன்

### நமது பண்டிகைகள், நமது திருவிழாக்கள்

உங்கள் பகுதியிலுள்ள பண்டிகைகள் மற்றும் விழாக்களின் பட்டியலைத் தயாரியுங்கள். அவற்றுள் ஏதேனும் ஒரு பண்டிகை-விழாவைப் பற்றிய மேலதிக தகவல்களைப் படங்கள், புகைப்படங்கள், செய்தித்தாள் வெட்டுகளுடன் சேகரித்து அலங்கரியுங்கள்.

**நிகழ்வை அடையாளம் கண்டு எழுதுங்கள்:-**

கீழ்க்கண்ட படங்களிலுள்ள நிகழ்வை அடையாளம் கண்டு, அந்தப் பண்டிகை-விழாக்கள் பற்றிய தகவல்களை எழுதுங்கள்.











உங்கள் பகுதியில் கொண்டாடப்படும் பண்டிகை விழாக்களை அவதானித்து, அதிலுள்ள கலை நிகழ்வைக் குழுவில் வழங்குங்கள்.

- நம் மாநிலத்திலுள்ள பல்வேறு நாட்டுப்புறக் கலைகள், பண்டிகைகள்-திருவிழாக்கள், பாரம்பரிய விளையாட்டுகள், உணவுப் பண்பாடு - இவை அனைத்திலுமுள்ள கலை அம்சங்களைப் பல்வேறு உதாரணங்களின் மூலம் விளக்க வேண்டும்.

CG –4
C– 4.1/4.2
LO–04AE20/21/39/38

தினமும் பயன்படுத்தும் பல்வேறு பொருட்கள் - இவை அனைத்திலும் பங்களிப்பு இருக்கிறது. அதில் ஒவ்வொரு துறையின் கலைஞர்களும் பங்கேற்கிறார்கள். அதன் காரணமாகக் கலைஞர்களின் அறிமுகம் ஏற்படுகிறது.



மண்பாண்டக் கலை



வார்லி ஓவியக் கலை



நாட்டிய மங்கை



பாரூட் கலைஞர்



வாசுதேவ்



ஒப்பனைக் கலைஞர்



பாடகி

- உங்கள் பகுதியில் கொண்டாடப்படும் பண்டிகைகள் திருவிழாக்களை அவதானித்து, அதிலுள்ள கலையையும் நிகழ்வையும் குழுவில் வழங்குங்கள்.

CG -4
C-4.2
LO-04AE39/52

### கள ஆய்வுப் பயணம்:

உள்ளூர்க் கலை-பண்பாட்டைப் புரிந்துகொள்ள கள ஆய்வுப் பயணம் மிகவும் முக்கியமானது. கள ஆய்வுப் பயணம் என்பது நேரடியாக ஒரு இடத்திற்குச் சென்று அங்குள்ள கலை, பண்பாடு, மரபு ஆகியவற்றைப் பார்ப்பதாகும். இத்தகைய பயணத்தால் நம் பகுதியிலுள்ள கலைஞர்களின் வேலையை அருகில் இருந்து பார்க்கும் வாய்ப்பு கிடைக்கிறது.

உதாரணமாக, மண் பாத்திரங்கள் செய்யும் கைவினைஞர்கள், ஓவியக் கலைத்துறையில் வேலை செய்யும் கலைஞர்கள், அல்லது கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் மக்கள் எவ்வாறு வேலை செய்கிறார்கள் என்பதை நேரடியாகப் பார்க்க முடியும். கலைஞர்கள் மண், வண்ணம், துணி அல்லது பிற பொருட்களைப் பயன்படுத்தி அழகான பொருட்களை எவ்வாறு தயாரிக்கிறார்கள் என்பது புரிகிறது.

### கள ஆய்வுப் பயணத்தின்போது கடைப்பிடிக்க வேண்டிய எச்சரிக்கைகள்

ஒரு கலைஞரின் பணியகத்திற்கோ அல்லது உள்ளூர் கண்காட்சிக்கோ செல்லும்போது கீழ்க்கண்டவற்றைப் பின்பற்ற வேண்டும்.

- **கவனிப்பு:** கலைஞர் தனது கைகளையோ அல்லது கருவிகளையோ எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதை அமைதியாகக் கவனியுங்கள்.
- **கேள்வி கேட்டல்:** மனதில் எழுந்த ஐயங்களைப் பணிவாகக் கேளுங்கள்.
- **குறிப்பெடுத்தல்:** பார்த்த விஷயங்களையும் கிடைத்த தகவல்களையும் குறிப்பேட்டில் எழுதுங்கள்.
- **தூய்மை மற்றும் ஒழுங்கு:** பயணம் செல்லும் இடத்தில் எந்தப் பொருளையும் அனுமதியின்றித் தொடாதீர்கள், அங்கே குப்பை போடாதீர்கள்.
- **நன்றியுணர்வு:** கள ஆய்வுப் பயணம் முடிந்ததும் கலைஞருக்கு நன்றி தெரிவிக்க மறக்காதீர்கள்.

### நேர்காணல்

பகுதியில் பண்டிகை-விழாக்களின் காரணமாக வழங்கப்படும் பல்வேறு கலை வகைகளை அவதானியுங்கள். வாசுதேவ், பிங்களா, நந்தீபைல்வாலா (காளை ஆட்டக்காரர்), ஓவியர், சிற்பி, பாடகர், இசைக்கருவி வாசிப்பவர், மண்வேலை, மரவேலை செய்பவர்கள், மலர் அலங்காரம் செய்பவர்கள், நடனக் கலைஞர்கள் மற்றும் நாடகக் கலைஞர்கள் - இவர்களும் இதுபோன்ற கலைஞர்களுள் சிலரையும் நேர்காணல் செய்து அவர்களின் கலை பற்றி அறிந்துகொள்ளுங்கள். இதற்காக வகுப்பில் நேர்காணல் கேள்விகளைத் தயார் செய்யுங்கள்.

## எனது செயல்பாடு

1. உங்களுக்குப் பிடித்த பண்டிகை அல்லது விழாவின் படத்தை வரைந்து, அதிலுள்ள கலைக் கூறுகள் பற்றிய தகவல்களை எழுதுங்கள்.
2. பகுதியிலுள்ள கலை வகைகளைக் காணக்கூடிய இடங்களுக்குச் சென்று அவை பற்றிய தகவல்களை எழுதுங்கள்.
3. உங்கள் பகுதியிலுள்ள ஒரு கலைஞரைச் சந்தித்து, அவரது கலை மற்றும் பணி பற்றி நேர்காணல் செய்து, அந்தக் குறிப்புகளை அறிக்கை வடிவில் எழுதுங்கள்.
4. பல்வேறு கலைஞர்களுள் உங்களுக்குப் பிடித்த கலை வகையின் படங்கள், புகைப்படங்கள், செய்தித்தாள் வெட்டுகள் மற்றும் தகவல்களைச் சேகரித்து ஒரு திட்டப்பணியைத் தயாரிக்க வேண்டும்.

- உள்ளூர்க் கலையையும் மரபையும் குழுவில் உரையாடச் செய்து, நேர்காணல் மற்றும் கள ஆய்வுப் பயணம் மேற்கொள்ள ஊக்குவிக்க வேண்டும்.

CG -4
C- 4.2
LO-
04AE21/38/39

# சிறப்பு பதிவுகள்

**அன்பு குழந்கைகளே!**

**யாராவது ஒருவர் உங்களை தவறான முறையில் தொடுவதைப் பற்றி நீங்கள் சங்கடமாக உணர்ந்தால், நீங்கள் அமைதியாக இருக்க வேண்டாம். நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால்.**

1. **உங்களை நீங்களே குறை சொல்லாதீர்கள்.**
2. **நீங்கள் நம்பும் ஒருவரிடம் சொல்லுங்கள்.**
3. **நீங்கள் போக்சோ மின்னஞ்சல் பெட்டி மூலம் தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு புகார் தெரிவிக்கலாம்.**

**நீங்கள் ஒரு பாதுகாப்பற்ற தொடுதலைப் பெறும்போது, நீங்கள் மோசமாகவும், குழப்பமாகவும் மற்றும் உதவியற்றவராகவும் உணரலாம்.**
**நீங்கள் மோசமாக உணர வேண்டியதில்லை. ஏனெனில் அது உங்கள் தவறு அல்ல.**




இந்த பொத்தானை அழுத்தவும்

POCSO e-box ncpcr@gov.in ல் கிடைக்கும்

**நீங்கள் 18 வயதுக்குட்பட்டவராகவோ, துன்பப்படுத்தப்பட்டவராகவோ, குழப்பத்திற்கு உட்பட்டவராகவோ, தவறான நேர்மையற்ற முறையில் பயன்படுத்தப்பட்டவராகவோ, மனக்கலக்கத்திற்கு உட்பட்டவராகவோ அல்லது அப்படிப்பட்ட துன்பத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை அறிந்தவராகவோ இருந்தால் ....**

1098 என்ற எண்ணுக்கு அழைக்கவும்...
அது உங்கள் வாழ்க்கையையும் உங்கள் நண்பர்களின் வாழ்க்கையையும் மாற்றக்கூடும்.




**துன்பத்தில் உள்ள குழந்தைகளுக்கான தேசிய 24 மணிநேர கட்டணமில்லா அவசர தொலைபேசி சேவையான சைல்ட்லைன் 1098, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் ஆதரிக்கப்படும் சைல்ட்லைன் இந்திய நிறுவனத்தின் முன்முயற்சியாகும்.**

புதிய விடியலை நோக்கி

**ஆசிரியர் குறிப்பு :** நல்ல தொடுதல்-கெட்ட தொடுதல் (குட் டச்-பேட் டச்) குறித்து மாணவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்



மகாராஷ்டிரா மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகம், புனே.

**कालाशिक्षण इयत्ता चौथी (तमिळ माध्यम )** ₹ 72.00

कालाशिक्षण इयत्ता चौथी ( तमिळ माध्यम )